காலாண்டு இதழ்

# சீற்றம்

மார்ச் 2024

படை 01 அணி 04

மாற்றத்தை நோக்கிய மலையகத்தின் குறியீடு



## சர்வதேச மகளிர் தின வாழ்த்துக்கள்

அட்டைப்படம்: சன்ன ஜயவர்தன

மார்ச் 2024

# சீமை

மாற்றத்தை நோக்கிய மலையகத்தின் குறியீடு

SEEMAI - සීමෙ


படை 01 அணி 04



**தொடர்புகளுக்கு**

076 6626754 / 077 2532296

077 2822449 / 077 1193900

**மின்னஞ்சல்**

seemaimagazine@gmail.com



## ஆசிரியர்

சதீஸ் செல்வராஜ்

## ஆலோசகர் குழு

கனேஷன் திலீப்குமார்

கிட்ணன் செல்வராஜ்

ரிச்சர்ட் ரொஹான்


மலையகத்தின் சிந்தனை ரீதியான புத்தெழுச்சிக்கு வலுசேர்க்கும் முயற்சியில் இணைவோம்.
நமது சிந்தனைகளும் உலகை வளப்படுத்தட்டும்.
மக்கள் படைப்பாளர்களே இக்களம் உங்களுடையது.



# புதிய தேசிய மறுமலர்ச்சிக்கான சபதம்

தொடக்கத்திலேயே சிவனடியார்களுக்கு 2024 ஆம் ஆண்டு மகா சிவராத்திரி வாழ்த்துக்களையும், மனிதக் குலத்தின் ஆணிவேராகவிருக்கும் பெண்மணிகளுக்கு 113 ஆவது சர்வதேச மகளிர் தின வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மனிதக் கலாச்சாரமும் வாழ்வும் அழிக்கப்பட்டிருக்கும், பெண்களின் உரிமைகளும் சுதந்திரமும் பறிக்கப்பட்டிருக்கும் நாட்டில் நிம்மதியற்று வாழ்ந்துகொண்டுதான் நாம் இந்தப் புனிதமான, மகத்தான நாளை கொண்டாட தள்ளப்பட்டிருக்கிறோம். 2025 இல் இந்நாள் இவ்வாறு அமையாது என்று சபதம் எடுத்துக்கொண்டு எதிர்காலத்தின் கட்டுமானப் பணிகளை சிறப்புறச் செய்திடுவோம்.

அன்பு வாசகர்களே!

நாட்டின் எல்லா புறத்திலும் வாழும் எம் மக்கள் இன்று நெருக்கடி மிகுந்த சூழலில் அமிழ்த்தப்பட்டுள்ளனர். வடக்கில் மீனவர் சமூகம் இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராக கறுப்புக்கொடி ஏந்தி கடலிலே போராட்டம் செய்கின்றனர். இலங்கையின் வடபகுதி கடற்பரப்புக்குள் நுழைந்து தென்னிந்திய முதலாளிகளின் இயந்திரப் படகுகள் எமது நாட்டின் இறைமையையை நொறுக்கியிருக்கின்றன. கடல்வளத்தை சூறையாடுகின்றன. எமது வடக்கு மீனவச் சமூகத்தின் வாழ்க்கையை அழிக்கின்றன. இதற்கு முடிவுகட்டப்பட வேண்டும். இதற்குத் தீர்வாக ஒருபோதுமே எமது கடல் வளத்தை இந்தியாவுக்குத் தாரைவார்க்க முடியாது. ஆகவே, தமிழக றோலார் படகு முதலாளிகளால் ஒட்டச் சுரண்டப்படுகிற தமிழக மீனவர்களுக்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தக்கத் தீர்வினை வழங்க வேண்டும் என கோருவதோடு, அதைப்போலவே இலங்கை அரசாங்கம் எமது நாட்டு மீனவர்களுக்கு நியாயத்தையும் நிவாரணத்தையும் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறோம்.

வரி அது இதுவென்று எல்லாம் ஏற்றி இன்று பொருட்களின் விலை எகிறியிருக்கின்ற நிலையில், மக்களுக்கு வாழ்வதற்கான வருமானம் போதாமல் இருக்கின்ற நிலையில் தொழிலாளர்கள் பலரும் சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து ஆர்ப்பாட்டத்தில் இறங்கியிருக்கின்றனர். ஆனால், ரணில் விக்ரமசிங்கவின் தலைமையீட்டில் மத்திய வங்கி ஊழியர்களுக்கு 70 சதவீத சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளது. இது எவ்விதத்திலும் நியாயமாகாது. இதற்கு அரசாங்கம் பொறுப்புக்கூறியாக வேண்டும்.

அத்தோடு, நாளுக்கு நாள் அத்தியாவசிய பொருட்களின் விலைவாசி அதிகரித்து வருகின்ற நிலையில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் மாத்திரம் இரு வருடங்களுக்கு ஒரு முறை அதிகரிப்பதென்பது நியாயமற்றது. அத்தோடு 1000 ரூபா எனும் சொற்ப ஊதியம் தோட்டத் தொழிலாளர்களின் எதிர்காலத்தை அழித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, உடனடியாக தோட்டத் தொழிலாளர்களின் நாட்சம்பளம் 2000 ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும். ஆனால், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற் சங்கங்கள் தோட்டத் தொழிலாளர்களின் நாட்சம்பளத்தை 1700 ரூபாவாக்க வேண்டும் என்று கம்பனிகளுடன் பேரம் பேசியிருக்கின்றன. இது மன்னிக்க முடியாத குற்றமாகும். தோட்டத் தொழிலாளர்களுக்கு இழைக்கின்ற அநீதியாகும். ஆகவே, நாட்சம்பளத்தை 2000 ரூபாவாக அதிகரிக்க கோரும் உரிமை போராட்டத்தில் தோட்டத் தொழிலாளர்கள் களமிறங்க வேண்டும். இந்தப் பெரட்டுக்களம் எப்பொழுதும் உழைக்கும் மக்களுக்காக ஓங்கிக் குரலெழுப்பும்.

அதுப்போலவே, இலவசக் கல்வியை நிர்மூலமாக்கி மாணவர்களின் கனவுகளை குழித்தோண்டிப் புதைக்கும் ஆட்சியாளர்களை விரட்டியடிக்கவும் தயாராக வேண்டும். தேசிய மக்கள் சக்தியின் மாணவர் சங்கம் மற்றும் அந்த்தரே மாணவர் இயக்கத்தின் மீது ரணில் ராஜபக்ஸ அரசாங்கத்தின் பொலிஸ் படை நடத்திய காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதோடு, குற்றவாளியான தேசபந்து தென்னகோனை பொலிஸ்மா அதிபராக நியமித்தமை தொடர்பிலும் எமது எதிர்ப்பை வெளிப்படுத்துகிறோம்.

அத்தோடு, சிவன் தன்னில் பாதியை உமைக்கு தந்து சமத்துவத்தை போற்றியது போல இந்நாட்டில் பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டு சமத்துவம் மேலோங்க வேண்டும். தமது உரிமைகளை வென்றெடுக்க பெண்கள் அணிதிரள வேண்டும். அரசியலில் களமிறங்க வேண்டும். குடும்பத்தை நல்வழிப்படுத்துவது போல இந்த நாட்டை நல்வழியில் இட்டுச் செல்ல பெண்கள் ஒரே மூச்சுடன் இணைய வேண்டும். இந்தப் புதிய தேசிய மறுமலர்ச்சிப் பயணத்தில் தோட்டத் தொழிலாளப் பெண்மணிகளின் பங்கு வரலாற்றில் புது அத்தியாயத்தை தொடங்கி வைப்பதாய் அமைய வேண்டும்.

# இம்மாத சிமையில்


3 புதிய தேசிய மறுமலர்ச்சிக்கான சபதம்
ஆசிரியர்

5 ஜனாதிபதித் தேர்தலும் பளிச்சிடும் முகங்களும்
ருத்ரரூபன்

11 சட்டியில் இருந்தும் அகப்பையில் வராத சம்பள விவகாரம்
கிட்ணன் செல்வராஜ்

14 கூடையின் புலம்பல்
திருமதி.பிரியா

15 மாபெரும் விழாவாய்க் கொண்டாடப்படும் மகளிர் தினமும் மலையகப் பெண்களும்
கண்ணன் மதுஷா

19 மென்மை
கல்கியூர் நிரோஷன்

20 காடாக மாறும் ஹொரகொல்லை தோட்டம்
A.R.ரொஹான்

23 இந்திய வீட்டுத்திட்டத்தில் பேர்போட்டுக்கொள்ள முண்டியடிக்கும் மலையக அரசியல்வாதிகள்
சதீஸ் செல்வராஜ்

27 ரணிலுக்கு எதிராக கட்டியெழுப்பப்படுகின்ற ரணில் புனைகதை
பிரியதர்ஷன தயாரத்ன

32 இலவசங்களால் ஏமாற்றப்பட்டவன்
மாரிமுத்து சசிரேகா

33 போதைப்பொருள் சந்தையாக மாணவர்கள்
எம். ராமதாஸ்

35 வியர்வையில் வந்த வெள்ளாமை
நிவேதா ஜெகநாதன்

39 தீமையை விலக்கி நன்மையைப் பயக்கும் காட்டேரியம்மன் வழிபாடு
ராசையா கவிஷான்

42 இஞ்சித் துண்டாய் மிதக்கும் அதிகாரம்
சண்முகம் சிவகுமார்

# ஜனாதிபதித் தேர்தலும் பளிச்சிடும் முகங்களும்



ருத்ரரூபன்

அமைதியாவே இருந்த ஜனாதிபதித் தேர்தல்களம் அநுரவின் இந்திய விஜயத்தையடுத்து பரபரப்படைந்துள்ளது. ஏனென்றால், இலங்கை வரலாற்றில் இதுவரையில் இந்தியாவும் ஜே.வி.பியும் இந்தளவிற்கு நெருங்கிப் பேசியது கிடையாது. அதுவும் இந்திய அரசாங்கமே தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்கவுக்கு உத்தியோகபூர்வ அழைப்பை விடுத்தமையானது ரணில்-ராஜபக்ஸ அணி, சஜித் அணி, மைத்திரி அணி, குஞ்சுக்குளவாரிகள் என்று எல்லோருக்கும் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறது. “மெய்யாலுமே அநுர அடுத்த ஜனாதிபதியாகி விடுவாரோ?” என்ற கேள்விகூட அவர்களின் நித்திரையை கெடுத்திருக்கக்கூடும். ஏனெனில், தி ஹிந்து பத்திரிகையும் அநுரவிற்கு ஐம்பது சதவீத மக்கள் ஆதரவு இருப்பதாக அறிவித்துவிட்டது! தவிர, உலக நாடுகளின் தூதுவர்களும் அநுரவை தேடி வந்துக்கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாது தற்போது சிங்கள வாக்குகளை அநுரவிடம் பறிகொடுத்திருக்கும் இவர்கள் தமிழர் வாக்குகளும் பறிபோய்விடுமோ என்று பதறும் அளவிற்கு நிலைமை உக்கிரமடைந்திருக்கிறது.

அத்தோடு, ஜனாதிபதித் தேர்தலை ஒருகாலும் ரணில் விக்ரமசிங்கவுக்கு கேள்விக்குட்படுத்த முடியாது. தேர்தலுக்கு அஞ்சி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட்டிருக்கலாம்; மகாணசபைத் தேர்தலை தள்ளிப்போட்டுவிட்டு ஆளுநர்களை கொண்டு அவற்றை நிர்வகிக்கலாம்; ஏன்! நினைத்தால் பாராளுமன்றத்தைக் கூட கலைத்துவிடலாம். ஆனால், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் ஜனாதிபதித் தேர்தலை ஒருபோதும் பிற்போடவோ, தவிர்க்கவோ முடியாது. அரசியலமைப்புச் சட்டப் புத்தகத்தை கையில் ஏந்திக்கொண்டுவந்து தான் சட்டப்படி நடப்பதாகக் கூறிய ரணிலுக்கு அந்தச் சட்டமே இப்போது முட்டுக்கட்டையாக இருக்கிறது. ஆக, இதை மீறினால் அது சட்டவிரோதமானதாகும்; ஜனநாயகத்திற்கு எதிரானதாகும்.

அந்தவகையில், இந்தவருடம் செப்டெம்பர் 18 இற்கும் ஒக்டோபர் 18 இற்கும் இடையில் ஜனாதிபதித் தேர்தல் கட்டாயம் நடத்தப்பட வேண்டும். ஆக, ஜனாதிபதியின் பதவிக்காலம் முடியும்போது ரணில் விக்ரமசிங்க கம்முனு கதிரையில் இருந்து இறங்கிவிடவேண்டும். மீண்டும் பாராளுமன்றத்திற்குள் வருவதை ஐக்கிய தேசியக் கட்சிதான் தீர்மானிக்க வேண்டும். ஏற்கெனவே,



அந்தக் கதிரையில் வஜிர அபேவர்தன அமர்ந்திருப்பார். ஆக, இதுவும் சர்ச்சைக்குரியது! அதுதான் இலங்கையின் சட்டம். அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதா? இல்லையா? அல்லது எப்போது நடத்துவது என்று கதையளப்பதற்குக் கூட ரணில் விக்ரமசிங்கவிற்கு அதிகாரமும் கிடையாது; சம்பந்தமும் கிடையாது. எதுஎவ்வாறாயினும், ஜனாதிபதித் தேர்தலை எவராலும் பிற்போடமுடியாது. அதேநேரம் தேர்தலை நடத்தும் அதிகாரமும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குத்தான் இருக்கிறது. ஆக, ஜனாதிபதிக்கோ, பிரதமருக்கோ அல்லது எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினருக்கோ இதுபற்றி தீர்மானிப்பதற்கான அதிகாரம் கிடையாது.

நிலைமைகள் இவ்வாறு இருப்பதனால்தான் ஆளும் தரப்பு பதறிப்போய் இருக்கிறது. அதனால்தான் இதுவரை இந்தியாவிற்கு இலங்கை வளங்களை தாரைவார்த்து வந்த கும்பல் அநுரவின் இந்திய விஜயத்தை பற்றி விமர்சித்துக்கொண்டும், புலம்பிக்கொண்டும் இருப்பதோடு, வேகுவேகென்று தேர்தல் கூட்டணிகளை அமைக்கவும் புறப்பட்டிருக்கின்றன. அத்தோடு, பழைய முகங்களுக்கு பவுடர் அடிக்கும் வேலையும், வெடிப்பு விட்டிருக்கிற பாரம்பரிய கட்சிகளின் கட்டுமானங்களுக்கு பெயின்ட் அடிக்கும் வேலையும் தொடங்கப்பட்டிருக்கிறது. அத்தோடு, அநுரவின் தலைமையில் தேசிய மக்கள் சக்தி என்ற கூட்டணியும் அசுர வடிவம் எடுத்திருக்கிறது. ஆக, சூடுபிடிக்கப் போகும் ஜனாதிபதித் தேர்தலில் பளிச்சிடப் போகும் இதுவரை நாம் அறிந்த வேட்பாளர்களைப் பற்றி பார்ப்போம்.

### ரணில் தந்திரக்காரரா? ஏமாற்றுக்காரரா?

"ரணில் விக்ரமசிங்க 2022 ஜுலை 21 இல்தான் அதிகாரத்திற்கு வந்தார்" என்று எவரேனும் நினைத்தால் அது முட்டாள்த்தனமானது. அவரும்கூட தான் நேற்று ஆட்சிக்கு வந்ததைப் போலத்தான் நடந்துக்கொள்ளப்பார்க்கிறார். தவிர, நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான கால அவகாசம் தனக்குப் போதாது எனவும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தன்னை வெல்லவைக்குமாறும் மக்களிடம் அவர் கேட்கிறார். ஆனால், உண்மையிலேயே ரணில் விக்ரமசிங்க என்பவர் புதிய நபரா?

ரணில் விக்ரமசிங்க தனது மாமனார் ஜே.ஆர். ஜெயவர்தன ஆறில் ஐந்து பெரும்பான்மையைப் பெற்று 1977 ஆம் ஆண்டு இலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகாரத்தை நிலைநிறுத்தியபோது பாராளுமன்றத்துக்குள் நுழைந்தார். இதன்போது ரணிலுக்கு கல்வி அமைச்சும், இளைஞர் விவகாரம் மற்றும் தொழில்வாய்ப்புகள் பற்றிய அமைச்சுப் பதவியும் வழங்கப்பட்டது. இக்காலப்பகுதியில் சிறுபான்மை மக்களுக்கு எதிராக தனது மாமனார் நடத்திய எல்லா தாக்குதலிலும் இவர் உடந்தையாக இருந்தார். ஜே.ஆரின் நெருக்கமான பிரபுக்கள் குழுவில் முதலாம் இடத்தில் காமினீ திசாநாயக்கவும், இரண்டாவது இடத்தில் லலித் எத்துலத்முதலியும், மூன்றாவது இடத்தில் ரணில் விக்ரமசிங்கவுமே இருந்தனர். அதுப்போல, இலங்கையின் அப்போதைய முக்கிய பாதாள உலகத் தலைவர்களான கோணகல சுனில், களு லக்கி போன்றோரை வழிநடத்தியவர்கள் ஜே.ஆரும் ரணிலும் ஆவர். அரசியல் எதிரிகளை

அழிக்கவும், இனக்கலவரங்களை உருவாக்கவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்கள் இக்கும்பலை பயன்படுத்தினர். அந்தவகையில், 1981 இல் யாழ் நூலகம் எரிக்கப்பட்ட சதியின் முக்கியப் புள்ளியாகவும் ரணில் இருக்கிறார். ஐக்கிய தேசியக் கட்சி தமிழர்களுக்கு எதிராக நடத்திய 1983 வன்முறையிலும் இவர் பிரதான சூத்திரதாரி. கொழும்பில் ரணிலின் வீட்டிலிருந்து ஒரு கிலோமீட்டருக்கு அப்பால் இருந்த தமிழருக்குச் சொந்தமான காமினீ மண்டபம் காடையர்களால் அழிக்கப்பட்டபோதும், தமக்கு வாக்களித்த தமிழர்களை சிங்கள் காடையர்கள் அடித்து விரட்டியபோதும் ரணில் கள்ள மௌனம் சாதித்தார். அதுமட்டுமன்றி, தற்போது பொருளாதாரத்தை மீட்க வந்த சூரராக பித்தலாட்டம் காட்டிக்கொண்டிருக்கும் ரணில் விக்ரமசிங்க, 1980 ஜூலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் 80 ஆயிரம் அரச ஊழியர்களின் தொழில்வாய்ப்புகள் பறிக்கப்பட்டு வீட்டுக்கு விரட்டியடிக்கப்பட்டபோது அமைச்சரவையில் இருந்தார். அன்றைய பொருளாதார சுமையின் காரணமாக தமது மாதச் சம்பளத்தை 10 ரூபாவால் அதிகரிக்குமாறு கோரிக்கையை முன்வைத்து வேலைநிறுத்தத்தில் இறங்கிய தொழிலாளர்களே மனிதாபிமானமின்றி இவ்வாறு விரட்டியடிக்கப்பட்டனர். இதன்போது, லலித் எத்துலத்முதலி “வேலைநிறுத்தத்தில் ஈடுபடுபவர்களை சுடுகாட்டுக்கு அனுப்பிவைக்க வேண்டும்.” என்று மிரட்டிய போது ரணில் விக்ரமசிங்க அதற்கு ஆதரவாக இருந்தார்.

இப்பேர்பட்ட ரணில் விக்ரமசிங்க ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலம் (47 வருடங்கள்) பாராளுமன்றத்தில் இருக்கிறார். ஆனால், இதில் விதிவிலக்காக 2020 இல் மக்களால் தோற்றகடிக்கப்பட்டார். தமது கட்சிக்குக் கிடைத்த ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்தில் 6 மாதங்களுக்குப் பின்னர் பாராளுமன்றத்திற்குள் வந்தார். அவர் பாராளுமன்றத்திற்குள் நுழைவதற்கு முன்னர் மஹிந்த ராஜபக்ஸ குடும்பத்தோடு இராப்போசணம் எடுத்துக்கொண்டார். இதன்போது பாராளுமன்றத்திற்கு வருமாறு ரணிலிடம் மஹிந்த கேட்டுக்கொண்டமையும் குறிப்பிடதக்கது. அதற்கு முன்னர் நல்லாட்சியில் ரணில் விக்ரமசிங்க பிரதமராக இருந்தார். 2015 இல் மைத்திரியுடன் இணைந்து அவர் ஆட்சிக்கு வந்தபோது



எதிர்காலத்தில் கடன் இல்லாத பிரஜைகளை தான் உருவாக்குவதாகக் கூறினார். ஆனால், சர்வதேச இறையாண்மை முறியாக அவர் 12.5 பில்லியன் டொலரை கடனாக பெற்றுள்ளார். அத்தோடு, நல்லாட்சிக் காலத்தில் மத்திய வங்கி பிணைமுறி மோசடியும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. “ரணில் விக்ரமசிங்க கட்சி சார்பற்ற வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவார்” என்று அண்மையில் கருத்து தெரிவித்த ரவி கருணாநாயக்க இந்த மோசடி இடம்பெற்றபோது நிதியமைச்சராக இருந்தார். அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய புள்ளியும் கூட.

2004 தேர்தல் காலத்திலும் தேர்தல் மேடைகளிலும் ரணில் முன்வைத்த கூற்றுக்கள் சில நினைவுக்கு

ரணில் விக்ரமசிங்க ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலம் (47 வருடங்கள்) பாராளுமன்றத்தில் இருக்கிறார். ஆனால், இதில் விதிவிலக்காக 2020 இல் மக்களால் தோற்றகடிக்கப்பட்டார். தமது கட்சிக்குக் கிடைத்த ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்தில் 6 மாதங்களுக்குப் பின்னர் பாராளுமன்றத்திற்குள் வந்தார். அவர் பாராளுமன்றத்திற்குள் நுழைவதற்கு முன்னர் மஹிந்த ராஜபக்ஸ குடும்பத்தோடு இராப்போசணம் எடுத்துக்கொண்டார். இதன்போது பாராளுமன்றத்திற்கு வருமாறு ரணிலிடம் மஹிந்த கேட்டுக்கொண்டமையும் குறிப்பிடதக்கது. அதற்கு முன்னர் நல்லாட்சியில் ரணில் விக்ரமசிங்க பிரதமராக இருந்தார். 2015 இல் மைத்திரியுடன் இணைந்து அவர் ஆட்சிக்கு வந்தபோது எதிர்காலத்தில் கடன் இல்லாத பிரஜைகளை தான் உருவாக்குவதாகக் கூறினார். ஆனால், சர்வதேச இறையாண்மை முறியாக அவர் 12.5 பில்லியன் டொலரை கடனாக பெற்றுள்ளார். அத்தோடு, நல்லாட்சிக் காலத்தில் மத்திய வங்கி பிணைமுறி மோசடியும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

வருகின்றன. அப்போது அவர், தமது ஆட்சியில் சுவிங்கம் மெல்லும் நவீன இளைஞர்களை உருவாக்குவதாகவும், எல்லோருக்கும் நல்ல கைக்கடிகாரத்தை வழங்குவதாகவும், அதைப்போல மோட்டார் சைக்கிளில் செல்வோரை காரில் பயணம் பண்ணவைக்கும் நவீன இலங்கையை உருவாக்குவதாகவும் கூறினார். இன்று நாடு படுபாதாளத்தில் வீழ்ந்துக்கிடக்கும் நிலையில்தான் இவற்றையெல்லாம் மீட்டிப் பார்க்கிறோம்.

ஆக, ஜனாதிபதியாகவும், 5 தடவைகள் பிரதமராகவும், எதிர்கட்சித் தலைவராகவும், அமைச்சராகவும், 47 வருடகாலமாக பாராளுமன்றத்திலும் இருந்த ரணில் விக்ரமசிங்க இன்று நாட்டு மக்களுக்கு எதை மிச்சப்படுத்தியிருக்கிறார். ஓர் அழிவடைந்த தேசமே எம் கண்முன்னே இருக்கிறது. இவ்வாறான பேரழிவின் பங்குதாரராக இருந்த ரணில் விக்ரமசிங்க நாட்டை ஆட்சி செய்ய இன்னுமொரு சந்தர்ப்பத்தைக் கேட்கிறார். அதுவும் இத்தனைக்காலம் எதிரணியாகவிருந்த ராஜபக்ஸர்களுடன் இணைந்துகொண்டு 2048 இல் இலங்கையை வளப்படுத்துவேன் என்கிறார். இவ்வாறான கருத்துக்களை காலங்காலமாக கூறிக்கொண்டிருக்கும் ரணிலை தந்திரக்காரர் என்பதா? ஏமாற்றுக்காரர் என்பதா?

**தேசிய மக்கள் சக்தி என்ற தேர்தல் இயக்கத்தை அநுர உருவாக்கிய பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்து சென்ற சஜித் பிரேமதாச ஐக்கிய மக்கள் சக்தி என்ற கட்சியை உருவாக்கினார். அதாவது, அநுர உருவாக்கிய தேசிய மக்கள் சக்தி என்ற பெயரில் "தேசிய" என்பதை தூக்கிவிட்டு இவர் "ஐக்கிய" என்பதைச் சேர்த்துக்கொண்டார். அத்தோடு, தந்தை ரணசிங்க பிரேமதாசவின் பெயரைப் பயன்படுத்திக்கொண்டு சஜித் பிரேமதாச அரசியலுக்குள் முண்டியடிப்பதாகவே அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக தனது மேடைப்பேச்சுகளில் "மகே பியானோ..." என்று தனது தந்தையின் புகழைப் பாட அவர் மறப்பதில்லை.**

### சஜித் இதற்கு சரிவருவாரா?

தேசிய மக்கள் சக்தி என்ற தேர்தல் இயக்கத்தை அநுர உருவாக்கிய பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்து சென்ற சஜித் பிரேமதாச ஐக்கிய மக்கள் சக்தி என்ற கட்சியை உருவாக்கினார். அதாவது, அநுர உருவாக்கிய தேசிய மக்கள் சக்தி என்ற பெயரில் "தேசிய" என்பதை தூக்கிவிட்டு இவர் "ஐக்கிய" என்பதைச் சேர்த்துக்கொண்டார். அத்தோடு, தந்தை ரணசிங்க பிரேமதாசவின் பெயரைப் பயன்படுத்திக்கொண்டு சஜித் பிரேமதாச அரசியலுக்குள் முண்டியடிப்பதாகவே அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக தனது மேடைப்பேச்சுகளில் "மகே பியானோ..." என்று தனது தந்தையின் புகழைப் பாட அவர் மறப்பதில்லை. 1988-89 காலப்பகுதிகளில் ரணசிங்க பிரேமதாச ஆயிரக்கணக்கில் இளைஞர்களை படுகொலைகளை செய்துள்ளார். அரசுக்கு சொந்தமாகவிருந்த 449 பெருந்தோட்டங்களை 1992 ஆம் ஆண்டு 22 பல்தேசியக் கம்பனிகளுக்கு தாரைவார்த்தார். இதன்போது 650 மில்லியன் ரூபா பணம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், இத்தொகையைக் கொண்டு மலையக மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த எவ்வித நடவடிக்கையையும் அவர் எடுக்கவில்லை. அதுப்போல, கம்உதாவ போன்ற வீட்டுத்திட்டங்களை அவர் முன்னடுத்தபோதிலும் அதில் சிங்கள மக்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டது. காணியுரிமை மறுக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் இதிலிருந்து புறக்கணிக்கப்பட்டனர். 1993 மே முதலாம் திகதி விடுதலை புலிகளின் தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் ரணசிங்க பிரேமதாச கொலை செய்யப்பட்டார். அதனால், தமிழ் மக்கள் மீது சஜித்துக்கு உள்ளூர ஒரு கோபம் இருப்பதாகவும் சிலர் சொல்வதுண்டு.

சஜித் பிரேமதாச 2000 ஆம் ஆண்டு ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் இருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். 2001 ஆம் ஆண்டில் சந்திரிக்காவின் ஆட்சியில் அவருக்கு சுகாதார துணை அமைச்சுப் பதவி வழங்கப்பட்டது. 2011 இல் ஐக்கிய தேசியக் கட்சியின் துணைத் தலைவர் ஆனார். 2015 இல் ரணில் – மைத்திரியின் கூட்டாட்சியில் சஜித் பிரேமதாச வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சராக இருந்தார். இதன்போதும், அரசாங்கத்தின் சார்பில் மலையக மக்களுக்கு எவ்வித வீடமைப்பு வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை. இந்திய நிதியுதவி வீடமைப்புத் திட்டமே முன்னெடுக்கப்பட்டது. அத்தோடு, இக்காலப்பகுதியில் கலாச்சார நிதியத்தில் ஊழல் மோசடிப் புரிந்ததாகவும், தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து மனைவியின் சலூனுக்கு அரச பாதுகாப்பை வழங்கியதாகவும் குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. அதுப்போல, உயரத்தின் அடிப்படையில்



சிக்யூரிட்டியா அல்லது தொழிலாளியா என்று தொழிலுக்கு ஆட்களை வகைப்பிரித்த அவரது காணொளியும் கூட வெளிவந்திருந்தது. அதுமட்டுமல்லாது, ரணில்-மைத்திரி ஆட்சியின்போதே தோட்டத் தொழிலாளர்களின் 1000 ரூபா சம்பள விடயம் களத்திற்கு வந்தது. ஆனால், சஜித் பிரேமதாச உள்ளிட்டவர்கள் இவ்விடயத்தில் இருந்து நழுவிவிட்டார்கள்.

சஜித் பிரேமதாச தற்போது தனிக் கட்சியை அமைத்திருப்பதுடன், ரணில் தரப்போடு கோபத்திலும் இருக்கிறார். ரணில் மற்றும் சஜித்துக்கு இடையில் தனிப்பட்ட பகைமை நிலவிவருகிறது. அதனால், இந்த இரண்டு தரப்பும் ஒன்றுசேருவதற்கான வாய்ப்புகள் இல்லாத நிலை இருக்கிறது. அதேநேரம், சஜித் இன்னமும் அரசியல் முதிர்ச்சியடையவில்லை என்ற குற்றச்சாட்டும் அரசியல் விமர்சகர்களிடம் இருக்கின்றது. பெரும்பாலான சிங்கள மக்கள் மத்தியிலும் அந்த நிலைப்பாடே நிலவுகிறது. தவிர, அநுர குமார திசாநாயக்க ஆற்றும் உரையினை பிரதி எடுத்து பேசுவதாகவும், அநுரவின் வேலைத்திட்டங்களை 'கொபி பேஸ்ட்' செய்வதாகவும் கூட குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. அநுர வட்டார, தொகுதி மற்றும் தேசிய கூட்டங்களை நடத்தினார். சஜித்தும் அதனை 'கொபி' செய்தார். அநுர ஓய்வுபெற்ற முப்படையினரை ஒன்றுதிரட்டினார். சஜித்தும் அதனை முயற்சித்தார். அநுர பெண்களை அணித்திரட்டினார். சஜித் அதற்கும் தயாராகி வருகிறார். சரி! அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா என்றாலும், இந்தியா அநுரவை உத்தியோகபூர்வமாக அழைத்ததையடுத்து, இந்தியா தன்னையும் அழைக்க வேண்டும் என்று சஜித் பிரேமதாச கெஞ்சினார். இச்செய்தி ஊடகங்களிலும் வெளிவந்திருந்தன. நிலைமை இப்படியிருக்க இன்னமும் இவரது அணியில் கட்சித் தாவும் கூத்தும் அரங்கேறிக்கொண்டே இருக்கிறது. சிலர் சஜித் நல்லம் என்றே கூறினாலும் அவரைச் சுற்றியிருப்பவர்கள் கள்ளர்களாக இருக்கிறார்களே என்று கடிந்துகொள்கிறார்கள். ஆக, தனிநபரால் இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியாது என்று முடிவெடுத்திருக்கிறார்கள். ஏனென்றால், கோட்டபாயவிடம் மக்கள் நல்ல பாடத்தை கற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதனால், இன்று பெரும்பான்மையானவர்கள் சஜித் ஜனாதிபதி பதவிக்கு சரிபட்டு வரமாட்டார் என்று சொல்கிறார்கள்.

**அநுர பாராளுமன்றத்தில் முதலிடம் பெற்ற உறுப்பினராகவும் இருக்கிறார். தொடர்ச்சியாக ஊழல், மோசடிகளுக்கு எதிராக பயமின்றி குரல் எழுப்பி வருகின்றார். அதுமட்டுமன்றி, பாராளுமன்றில் இவர் மலையக மக்களின் நிலைமை குறித்து ஆற்றிய உரை தேசிய அளவில் ஓர் அதிர்வலையையே ஏற்படுத்தியது. தற்போதும் மலையக மக்கள் சபை மாநாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதுவரையிலும் இனவாதம், மதவாதத்திற்கு எதிராக போராடி வருகின்றார். கடந்த முறை ஜனாதிபதித் தேர்தலில் வெறும் 3 சதவீத வாக்குகளை பெற்றிருந்த அநுர குமார திசாநாயக்க இன்று பெரும்பான்மை மக்களின் நாயகனாக உருவெடுத்திருக்கிறார்.**

### அநுரவின் விஸ்வரூபம்

அநுர குமார திசாநாயக்கவும் அரசியலுக்கு புதியவர் அல்லர். இவர் 80களில் ஜே.வி.பியின் பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் தலைவராகவும் செயற்பட்டிருக்கிறார். சந்திரிக்காவின் ஆட்சியில் வேளாண்மை, கால்நடைத்துறை, நீர்வளத்துறை அமைச்சராக இருந்துள்ளார். இதன்போது, மில்கோ பால் நிறுவனம் இலாபத்தை ஈட்டியது. அந்த இலாபத் தொகையில் அமைச்சின் ஊழியர்கள் போக்குவரத்து செய்வதற்கான பஸ் வண்டிகளையும் வாங்கிப் போட்டிருக்கிறார் அநுர. அந்த வண்டிகள் இன்று வரையும் ஓடுகிறது. அத்தோடு, விவசாயத்தை மேம்படுத்துவதற்காக குளங்கள் தூர்வார்க்கப்பட்டன. அவரது அமைச்சு சார்ந்த துறைகள் நவீனப்படுத்தப்பட்டன. 2014 பெப்ரவரி 2 ஆம் திகதி மக்கள் விடுதலை முன்னணியின் தலைவராக அநுர குமார திசாநாயக்க தெரிவு செய்யப்பட்டார். பாராளுமன்றத்தில் முதலிடம் பெற்ற உறுப்பினராகவும் இவர் இருக்கிறார். தொடர்ச்சியாக ஊழல், மோசடிகளுக்கு எதிராக பயமின்றி குரல் எழுப்பி வருகின்றார். அதுமட்டுமன்றி, பாராளுமன்றில் இவர் மலையக மக்களின் நிலைமை குறித்து ஆற்றிய உரை



தேசிய அளவில் ஓர் அதிர்வலையையே ஏற்படுத்தியது. தற்போதும் மலையக மக்கள் சபை மாநாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதுவரையிலும் இனவாதம், மதவாதத்திற்கு எதிராக போராடி வருகின்றார். கடந்த முறை ஜனாதிபதித் தேர்தலில் வெறும் 3 சதவீத வாக்குகளை பெற்றிருந்த அநுர குமார திசாநாயக்க இன்று பெரும்பான்மை மக்களின் நாயகனாக உருவெடுத்திருக்கிறார். இவர்தான் அடுத்த ஜனாதிபதி என்று வெளிநாட்டு தலைவர்கள் கூறும் அளவுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றிருப்பதுடன், தேசிய மக்கள் சக்தியின் திசைகாட்டியைச் சூழ இளைஞர்கள், மாணவர்கள், பெண்கள், விவசாயிகள், மீனவர்கள், தொழிலாளர்கள், முப்படையினர், தொழிற்சங்கவாதிகள் என்று பெரும் சக்தி அணிதிரண்டு நிற்கிறது.

## அநுரவுக்கு எதிராகத் திரளும் எதிரணிகள்

அநுர திசாநாயக்கவை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிப்பதற்காக பல்வேறு தந்திரோபாயங்களை எதிரணியினர் கையாண்டு வருகின்றனர். அந்த வகையில், ரணில்-ராஜபக்ஸ-மைத்திரி-சந்திரிக்கா ஆகிய எல்லா ஜனாபதிகளும் ஒன்றுசேரவுள்ளதாக கதையடிப்படுகின்றன. அதன்படி, 88-89 மற்றும் அரகலய போராட்டம் குறித்து பொய்ப்பிரச்சாரங்களை முன்னெடுப்பதற்கு இக்குழுவினர் திட்டம் தீட்டியிருந்தனர். ஆனால், அதுவும் அம்பலத்திற்கு வந்தது. அதுமட்டுமன்றி, இதுவரை சிங்கள வாக்குகள் மாத்திரம் எமக்கு போதும் என்று இனவாதம் பேசியவர்கள் தற்போது தமிழ்ப்பேசும் மக்களின் வாக்குகளை தேடி ஓடுகின்றனர். ஏனெனில், சிங்கள வாக்குகளில் பெரும்பங்கு இப்போது அநுரவின் வசமாகியிருக்கிறது. அதனால்தான், ஞானசாரதேரர் கூட தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்டார். ரணில் வடக்குக்கு ஓடுகிறார். 13 ஐ தருவதாக கதையளக்கிறார். இவரை தொடர்ந்தும் நம்பினால் தமிழ்த் தரப்புக்கு இடுகாடு மட்டுமே எஞ்சும்.

அதுமட்டுமன்றி, தம்மிடம் இருந்து பறிபோன சிங்கள வாக்குகளை மீளப் பெறுவதற்கு ராஜபக்ஸர்கள் பசிலை கொண்டுவந்து இப்போது பம்மாத்துக் காட்டுகின்றனர். அதிலும் குறிப்பாக சில கறுப்பு ஊடகங்களின் அடம்தான் தாங்கமுடியாமல் இருக்கிறது. ஓர் ஊடகம் பசிலின் வருகை குறித்து கீதா குமாரசிங்கவிடம் கருத்து கேட்டபோது அதற்கு அவர், “பசில் வந்ததற்கு நீங்கள் ஏன் இப்படி தடுமாறுகிறீர்கள். “வெல்கம்” என்று வரவேற்க வேண்டியதுதானே. அவர் வந்து என்ன புதுமையை செய்யப்போகிறார் என்று அறிந்துகொள்வதற்கு நான் ஒன்றும் அவரது மனைவி இல்லையே? உங்களுக்கு ஏதாவது கேட்கவேண்டும் என்றால் பத்தரமுல்லையில் உள்ள அவரது வீட்டுக்குச் சென்று கேட்டுக்கொள்ளுங்கள்.” என்று வாயடைத்து போகும் அளவுக்கு பதில் வழங்கினார். இவ்வாறான நிலையில்தான் தேர்தலை தள்ளிப்போட ரணில் முயற்சிக்கின்ற போதிலும் அதை செய்யமுடியாத நிலை நாட்டில் நிலவுகிறது. பாராளுமன்றத்தை கலைத்து ரணில் தேர்தலுக்குச் சென்றாலும், ஜனாதிபதித் தேர்தல் கட்டாயம் குறித்த காலப்பகுதியில் நடத்தப்படவே வேண்டும். அத்தோடு, பாராளுமன்றத் தேர்தலிலும் படுதோல்வியை சந்திக்கும் நிலையே ஆளும் கட்சிக்கு ஏற்பட்டிருக்கிறது. அதனால், கூட்டணியை அமைத்து மக்கள் ஆதரவை பெற அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

சஜித் தரப்புக்குள்ளும் ஆயிரம் குளறுபடிகள்! ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றில் இவ்வருடத்துக்கான முதல் உரையை நிகழ்த்தியபோது, சஜித் வெளிநடப்பு செய்துவிட்டார். ஆனால், அவரது அணியைச் சேர்ந்த சரத் பொன்சேக்கா, பாட்டலி சம்பிக்க ஆகியோர் செல்லவில்லை. கூட்டணிக்குள் சஜித்துக்கு இருக்கும் மரியாதை அவ்வளவுதான். அதுமட்டுமன்றி, அவன்கார்ட் நிஸ்ஸங்க சேனாதிபதியோடு இருந்த தனியார் படைவீரர்களை சஜித் தனது பக்கம் இணைத்துக்கொண்டுள்ளமை விமர்சனத்திற்கு உள்ளாகியிருக்கிறது. அதுமட்டுமன்றி, பாராளுமன்றில் இவர்களது நடத்தையும் கேலிக்கூத்தாகியிருக்கின்றது. அத்தோடு, எவ்வித தெளிவும் இல்லையென்று சஜித்தின் பேச்சுக்களை மக்கள் புறக்கணித்து வருகின்றனர். இந்நிலையிலேயே அநுர குமார திசாநாயக்க தனித்து வளர்ந்து வருகிறார்.

# சட்டியில் இருந்தும் அகப்பையில் வராத சம்பள விவகாரம்



## தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏன் பாரபட்சம்

**கிட்ணன் செல்வராஜ்**

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு விடயத்தை 200 வருட மலையக வரலாற்றின் இன்னுமொரு கட்டமாக பார்க்க வேண்டியுள்ளது. அதில் காலனியாதிக்கம் உலகில் ஓரளவு உழைக்கும் மக்களுக்கு உரிமை மற்றும் சலுகைகளை வழங்கியிருந்தாலும் இலங்கையில் மலையகத்தில் குடியேற்றப்பட்ட இந்திய வம்சாவளி மக்களுக்கு எதையும் பெற்றுத்தரவில்லை.

குறிப்பாக காலனியாதிக்கத்தின் பிடியில் உலக உழைக்கும் வர்க்கம் சிக்கியிருந்த போதிலும் இலங்கையின் பெருந்தோட்டங்களுக்கு உழைக்க வந்த உழைப்பாளர்கள் வெள்ளையர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தார்கள் என்பதை விட, கங்காணிமார்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தார்கள் என்பதே உண்மை. அதன் காரணமாக தோட்டத் தொழிலாளர்களுக்கு வெள்ளையர்களின் நிர்வாகம் வழங்க முன்வந்த சொற்ப தொகையைக் கூட கங்காணிகள் முழுமையாக வழங்க முன்வரவில்லை என்பது துயரம் கலந்த உண்மை.

உலகம் மாறுதலுக்கு உள்ளாகி தொழிற்சங்கங்கள் நடைமுறைக்கு வந்ததன் பின்னர் சில உரிமைகள் மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைத்தாலும் கூட சம்பள உயர்வு விடயம் வரலாற்று ரீதியாகவே இன்றுவரையும் தீர்க்கப்படாத ஒன்றாகவே

1867 ஆம் ஆண்டு தேயிலைத் தொழில்துறை தொடங்கப்பட்டு இன்றைய 2024 ஆம் ஆண்டில் நாம் பார்க்கும்போது தேயிலைக்கு ஏறக்குறைய 157 வயதாயிருக்கிறது. அந்த வரலாற்றில் 1948 வரை வெள்ளையர்கள் நாட்டை ஆண்டார்கள். 1948 முதல் 1972 வரை தோட்டங்கள் தனியார் கம்பனிகளிடம் இருந்தன. அதில் தோட்டத் தொழிலாளர்கள் நாட்கூலிகளாக நடத்தப்பட்டனர். 1972 முதல் 1992 ஆம் ஆண்டு வரை தோட்டங்கள் அரச நிறுவனமாகும். இதன்போதும் தோட்டத் தொழிலாளர்கள் நாட்கூலிகள். 1992 ஆம் ஆண்டு முதல் தோட்டங்கள் பல்தேசிய நிறுவனங்கள் நிர்வாகிக்கும் தனியார் நிறுவனங்களிடம் சென்றன. அப்போதும் தோட்டத் தொழிலாளர்கள் நாட்கூலிகள். சுருக்கமாகச் சொன்னால் 157 வருட தேயிலை "யுக" வரலாற்றில் தொழிலாளர்கள் நாட்கூலிகள்.

இருந்துவருகிறது.

1867 ஆம் ஆண்டு தேயிலைத் தொழில்துறை தொடங்கப்பட்டு இன்றைய 2024 ஆம் ஆண்டில் நாம் பார்க்கும்போது தேயிலைக்கு ஏறக்குறைய 157 வயதாயிருக்கிறது. அந்த வரலாற்றில் 1948 வரை வெள்ளையர்கள் நாட்டை ஆண்டார்கள். 1948 முதல் 1972 வரை தோட்டங்கள் தனியார் கம்பனிகளிடம் இருந்தன. அதில் தோட்டத் தொழிலாளர்கள் நாட்கூலிகளாக நடத்தப்பட்டனர். 1972 முதல் 1992 ஆம் ஆண்டு வரை தோட்டங்கள் அரச நிறுவனமாகும். இதன்போதும் தோட்டத் தொழிலாளர்கள் நாட்கூலிகள். 1992 ஆம் ஆண்டு முதல் தோட்டங்கள் பல்தேசிய நிறுவனங்கள் நிர்வாகிக்கும் தனியார் நிறுவனங்களிடம் சென்றன. அப்போதும் தோட்டத் தொழிலாளர்கள் நாட்கூலிகள். சுருக்கமாகச் சொன்னால் 157 வருட தேயிலை "யுக" வரலாற்றில் தொழிலாளர்கள் நாட்கூலிகள். அதாவது, 200 வருட மலையக வரலாற்றில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு உரித்தான நன்நடத்தை சான்றிதழ் இதுவாகும். தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட்கூலிகள் என்ற சான்றிதழே எஞ்சியது.

தோட்டத் தொழிலாளர்கள் அந்த வரையறைக்குள் இருந்து இன்னும் வெளிவரவில்லை. இது பெரும் பாரபட்சமாகும். உலகில் ஒரு உழைக்கும் பட்டாளம் அதாவது, ஒரு துறைசார்ந்த உழைப்பு பட்டாளம் இருநூறு வருடங்களாக நாட்கூலிகளாக இருப்பார்களாயின் அது மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களே ஆவர்.

காலனித்துவ ஆட்சியில் நாட்சம்பள உயர்வுக்குப் பெருந்தடையாக இருந்தவர்கள் கங்காணிகள். இன்று கங்காணிகள் யுகம் மாறி அரசியல் ரீதியாக பரிணாமம் பெற்றிருப்பதால் இன்னும் தடையாய் இருப்பவர்கள் மலையக அரசியல் ஆதிக்கவாதிகள் ஆவர். இவர்கள் அரசியல் மற்றும் தொழிற்சங்க ரீதியில் ஆளும் அணியுடன் அணிதிரண்டிருப்பதால் பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள விடயமானது "நாட்கூலி" பதத்தில் இன்னும் பதம் பார்க்கப்படுகிறது.

அரச நிர்வாக கட்டமைப்பில் உள்ள பெருந்தோட்டங்கள் பன்னாட்டு கம்பனிகளுக்கு 1992 ஆம் ஆண்டு குத்தகை முறையினூடாக பெற்றுக்கொடுக்கப்பட்டு இன்றுடன் 32 வருடங்களை அண்மிக்கின்றது. பெருந்தோட்டங்களை தனியாருக்கு வழங்கும்போது உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது. அதுவே கூட்டு உடன்படிக்கையாகும். அதில் குறிப்பாக பின்வரும் கூற்றுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி, நலன்புரி, சம்பள விடயம் போன்றன உள்ளடக்கப்பட்ட போதிலும் இவை எவற்றையும் சரியாக நடைமுறைப்படுத்த கம்பனிகள் முன்வரவில்லை. ஏன் இதனோடு சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்களும் முன்வரவில்லை. அதாவது CWC, LJWU தொழிற்சங்க கூட்டமைப்பு ஆகியவை உள்ளடங்குகின்றன. இவர்களும் இவற்றைப்பற்றி ஏறெடுத்தும் பார்ப்பதில்லை.

அதன் காரணமாக ஒப்பந்தத்தில் காட்டப்பட்டுள்ள சம்பள விடயத்தைத் தவிர ஏனைய பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி, நலன்புரி என்பவை அறவே கைவிடப்பட்டுள்ளன. இரு வருடத்துக்கு ஒருமுறை மட்டும் சம்பள விடயம் பேசப்பட்டு அதுவும் தற்போது கிடப்பில் போடப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் பாரியளவில் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் ஆவர். அவ்வாறான நிலையில் அவர்களின் சம்பள விடயம் இழுத்தடிக்கப்படுவதும், ஓரக்கண்ணில் பார்க்கப்படுவதும்

கவலக்குரியது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயம் மற்றும் சம்பள உயர்வு விடயம் தற்போது சம்பள நிர்ணய சபை பக்கமே இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் இதில் தலையிட்டு தீர்க்க வேண்டும். அரச மற்றும் தனியார்த்துறை ஊழியர்கள் தமக்கான சம்பள உயர்வை கோரி போராட்டங்களை முன்னெடுக்கின்றபோது, அதற்கான தீர்வாக அரசாங்கம் 5000 ரூபா அதிகரிப்பை வழங்க முன்வந்த நிலையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரம் கிடப்பில் போடப்பட்டுள்ளது. தோட்டத் தொழிலாளர்களின் சம்பள வியடம் சம்பள நிர்ணய சபையில் இருப்பதால் அரசாங்கம் தலையிட்டு இதனைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடந்த சம்பள உயர்வு விவகாரத்தை சம்பள நிர்ணய சபை தீர்க்க முனைந்த போதிலும் கம்பனிகள் அதனை எதிர்த்து உச்சநீதிமன்றம் சென்றன. அதனை நீதிமன்றம் நிராகரித்த போதிலும் இன்னும் கம்பனிகள் பழைய மந்திரமான நட்டம் எனும் சூனிய மந்திரத்தையும், அதற்கு மாற்றுத் தீர்வு "Out Grow" முறை என்பதையும் தொழிலாளர்களிடம் அறிமுகப்படுத்தி முன்னெடுக்க முனைகிறது. அதற்குச் சமாந்திரமாக அரசும் மலையகத் தொழிற்சங்க மற்றும் மலையக சார்பு தலைமைகளும் பெருந்தோட்டத் தொழிலாளர்களை சிறுதேயிலைத் தோட்ட உரிமையாளர்களாக மாற்றுகிறோம் என்று கோசம் எழுப்புவது சம்பள உயர்வு விடயத்தை மூடிமறைப்பதற்கான நடவடிக்கையாகும். பெருந்தோட்டத்துறை நழிவுடன், தேயிலை உற்பத்தி வீழ்ச்சியுடன் பெருந்தோட்டங்கள் சுடுகாடாக மாறிவரும்



அரச நிர்வாக கட்டமைப்பில் உள்ள பெருந்தோட்டங்கள் பன்னாட்டு கம்பனிகளுக்கு 1992 ஆம் ஆண்டு குத்தகை முறையினூடாக பெற்றுக்கொடுக்கப்பட்டு இன்றுடன் 32 வருடங்களை அண்மிக்கின்றது. பெருந்தோட்டங்களை தனியாருக்கு வழங்கும்போது உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது. அதுவே கூட்டு உடன்படிக்கையாகும். அதில் குறிப்பாக பின்வரும் கூற்றுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி, நலன்புரி, சம்பள விடயம் போன்றன உள்ளடக்கப்பட்ட போதிலும் இவை எவற்றையும் சரியாக நடைமுறைப்படுத்த கம்பனிகள் முன்வரவில்லை. ஏன் இதனோடு சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்களும் முன்வரவில்லை. அதாவது CWC, LJWU தொழிற்சங்க கூட்டமைப்பு ஆகியவை உள்ளடங்குகின்றன. இவர்களும் இவற்றைப்பற்றி ஏறெடுத்தும் பார்ப்பதில்லை.

நிலையில் கம்பனிகள் எஞ்சியிருக்கும் மரங்களை தொழிற்சங்க ஆதரவுடன் வெட்டி விற்றுத்தீர்க்கும் நிகழ்வு முன்னெடுக்கப்படுவதுடன், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயத்துக்கு ஆப்பு வைக்கப்பட்டுள்ளது.

கம்பனிகள் பொறுப்பேற்று 32 வருடங்களில் இலங்கையில் 198 தேயிலைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. 65 சதவீதமாக இருந்த பச்சைத் தேயிலைக் கொழுந்து உற்பத்தி 17 சதவீதமாக குறைவடைந்தள்ள நிலையில் எஞ்சியிருப்பதையும் விற்றுத்தீர்க்கும் வேலைத்திட்டம் அமைதியாக நடந்தேறுகிறது. அந்த நிலையில் சம்பள உயர்வு கோரிக்கை மட்டுமல்லாது தேயிலைத் தொழிற்றுறையையும் கட்டியெழுப்பும் தேசிய வேலைத்திட்டத்தை முன்னெடுக்க பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மட்டுமல்ல மலையகமும் முன்வரவேண்டும். அதற்கு காலாவதியான அரசியல் சாக்கடை கலாசாரத்தில் இருந்து விடுபட்டு புதிய அரசியல் கலாசாரத்தில் அணித்திரள வேண்டும்.

# கூடையின் புலம்பல்

தேயிலைக் காட்டினிலே
தொடங்கிய நமது தேடல்
இன்று வரை
முடிவுறா கதையாய்
முகாரி பாடிட
மூச்சை முட்டும்
வாழ்க்கைச் செலவுகள்
உயிரை தீயில் தள்ளிட
வாழ்வா சாவா
இரண்டுமற்ற நிலையில்
இம்மண்ணில்
இயங்குகின்றோம் நாளுமே

வேதன உயர்வுகளும் எமக்கு
வேதனை காற்றாகிட
சோதனை பலவும் வென்று கூடைக்குள்
கனவுகளை உற்பத்தி செய்தே
உரமாகின்றோம்
உலகிற்கு

லயத்துப் பறவைகளின் கண்ணீரிலும்
வியர்நீரிலும் உப்பில்லையாம்
உயர்ந்தவர்கள் உலறுகின்றனர் இங்கு

கட்டுப்பாடுகளும் தட்டுப்பாடுகளும்
நம் தலைவிதியினை
தடவிட
தரணியில்
தனித்தியங்குகின்றோம் நாமுமே

பேசுபொருளாக
மட்டுமே பார்க்கும் எமக்கும்
இதயம் உண்டென்பதை
இம்மண்ணில்
இதயம் சிறுத்தவர்கள்
என்று அறிவாரோ ?

**திருமதி.பிரியா**

ஆசிரியர்
நானுஓயா





# மாபெரும் விழாவாய்க் கொண்டாடப்படும் மகளிர் தினமும் மலையகப் பெண்களும்

**கண்ணன் மதுரஷா**
தெனியாய

**"நீங்கள் நடக்கத் தொடங்கும் வரை உங்கள் கால்கள் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருப்பது உங்களுக்கே தெரியாது"** என்ற ரோசா லக்சம்பர் கூற்றின்படி, எமது விடுதலைக்காக எமது கால்கள் நகரும் போதுதான் எம்மைச் சுற்றியுள்ள அடிமைச் சங்கிலிகளை நாம் உணரத் தொடங்குவோம். அவ்வாறு உணரத் தொடங்கும்போது எம்மைச் சரியான திசையில் வழிநடத்த அமைப்பாக்கம் பெறுவதுதான் பெண்களின் இன்றைய தேவைகளில் ஒன்றாக இருக்கிறது. அந்தவகையில் 1987 இல் மார்ச் 08 ஆம் திகதி நியூயோர்க் நகரில் ஆயிரக்கணக்கான உழைக்கும் பெண்கள் ஆண்களுக்கு நிகரான சரியான ஊதியம் வேண்டி போராட்டம் செய்து பொலிஸாரால் அடக்கப்பட்டனர். இந்நாளே பிற்காலத்தில் மகளிர் தினமாக கொண்டாடப்பட்டது. அதன்படி, முதலில் 1911 ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. 1975 ஆம் ஆண்டு இந்நாளை சர்வதேச மகளிர் தினமாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்தது. 1908 இல் 15,000 பெண்கள் வரையில் நியூயோர்க் நகரத்தின் குறைந்தளவு வேலைநேரம், ஊதியம் மற்றும் வாக்களிக்கும் உரிமை ஆகியவற்றை கோரி அணிவகுத்து சென்ற நாள் சர்வதேச மகளிர் தினத்துக்கு அடித்தளமையாய் அமைந்தது.

இந்நாளை சர்வதேசமயமாக்க வேண்டும் என்ற எண்ணம் கம்யூனிஸ்ட் போராளியும் பெண்கள் உரிமைகளுக்காக குரல் கொடுத்தவருமான கிளாரா ஜெட்கின் என்ற ஜேர்மனிய மார்க்சிச தத்துவவாதி பெண்மணியிடமிருந்தே வந்தது. 1910 இல் கோபக்ஹெகனில் நடந்த உழைக்கும் பெண்களுக்கான சர்வதேச மாநாட்டில் அவர் அதை பரிந்துரை செய்துள்ளார். அங்கு 17 நாடுகளை சேர்ந்த 100 பெண்கள் இருந்தார்கள். அவர்கள் அவரின் ஆலோசனையை ஒருமனதாக ஏற்றுக்கொண்டார்கள்.

அதன் பொருட்டு மகளிர் தினம் முதன்முதலில் 1911 இல் ஆஸ்திரியா, டென்மார்க், ஜேர்மனி மற்றும் சுவிட்சர்லாந்தில் கொண்டாடப்பட்டது. 1966 இல் ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு முதல் கருப்பொருளாக "கடந்த காலத்தை கொண்டாடுதல், எதிர்காலத்தை திட்டமிடல்" என்ற வகையில்




அமைந்தது. 1975 இல் ஐக்கிய நாடுகள் சபையில் அதிகாரபூர்வமாக்கப்பட்டது.

அந்தவகையில் பெண் விடுதலைக்காக பல பெண் சிங்கங்கள் களத்தில் நின்று போராடியிருக்கின்றர். அவர்களது மகோன்னதமான அர்ப்பணிப்பின் மூலம் பெண் உரிமைகள் பல வென்றெடுக்கப்பட்டுள்ளன. ஜெர்மனியின் கிளாரா ஜெட்கின், இந்தியாவின் அன்னை தெரசா மற்றும் மலையகத்தைச் சேர்ந்த மீனாட்சியம்மாள் போன்றோர் அந்த வீரமங்கைகளின் வரிசையில் நிற்கும் காத்திரமான ஆளுமைகள் ஆவர்.

பெண்களின் முக்கியத்துவத்தை உணர்ந்ததனாலேயே சர்வதேச ரீதியில் மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. ஆனால், மலையகப் பெண்களின் வாழ்க்கையில் இவ்வாறான ஒரு தினம் எவ்வாறான ஒரு நாளாக சிறப்பிக்கப்படுகிறது, அதன் தாற்பரியம் உணர்த்தப்பட்டுள்ளதா என்றால் இல்லை என்றுதான் கூறவேண்டும். இற்றைக்கு 200 வருடங்களுக்கு முன் பிரித்தானியரினால் இந்தியாவிலிருந்து இலங்கையின் கோப்பித் தோட்டங்களுக்கும், தேயிலைத் தோட்டங்களுக்கும் கூலிகளாக கொண்டுவரப்பட்ட மக்கள் கூட்டமே இன்றையநாள் வரையிலும் இலங்கையின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கினை வகிப்பது நாம் அறிந்த உண்மை.

ஆனால், இவ்வாறு தேசியப் பொருளாதாரத்திற்கு அச்சாணியாய் இருக்கும் எத்தனை பெண்கள் மகளிர் தினத்தில் நினைவுகூரப்படுகிறார்கள்? எத்தனை பெண்களுக்கு தமக்கான உரிமைகள் கிடைத்துள்ளன என்ற வினாவை எழுப்பினால் விடை என்னவாக இருக்கும் என்பது சிந்திக்கத் தூண்டும் விடயமே!

**பெண்களுக்கு சொத்தும் கூடாதாம்**
**காதல் சுதந்திரமும் கூடாதாம்**
**அப்படியானால் மனிதன் தன் தேவைக்கு பயன்படுத்திக்கொள்ளும்**
**இறப்பர் பொம்மையா அவள்?**

**பெண் விடுதலைக்காக பல பெண் சிங்கங்கள் களத்தில் நின்று போராடியிருக்கின்றர். அவர்களது மகோன்னதமான அர்ப்பணிப்பின் மூலம் பெண் உரிமைகள் பல வென்றெடுக்கப்பட்டுள்ளன. ஜெர்மனியின் கிளாரா ஜெட்கின், இந்தியாவின் அன்னை தெரசா மற்றும் மலையகத்தைச் சேர்ந்த மீனாட்சியம்மாள் போன்றோர் அந்த வீரமங்கைகளின் வரிசையில் நிற்கும் காத்திரமான ஆளுமைகள் ஆவர்.**

தன்னையும் தன் உடலையும் தன் குடும்பத்திற்காகவும் தன் நாட்டிற்காகவும் அர்ப்பணிக்கும் பெண்கள் மலையகத்தில் ஏராளம். தோட்டத் தொழிலாளப் பெண்கள் பொதுவாகவே காலை 05 மணிக்கு துயில் எழுந்து கடும் குளிரிலும், பனியிலும் தன் குடும்பத்திற்கு காலை உணவு, மதிய உணவு தயார் செய்து பிள்ளைகளை பாடசாலைக்கு ஒழுங்கு செய்து 7.30 மணியளவில் புறப்பட்டு 08 மணிக்கு முன்னரே 2,3 கிலோமீட்டர் தூரம் நடந்துசென்று மலையேறி, தான் பறித்தெடுத்த கொழுந்தினை சுமந்து தொழிற்சாலைக்கு வந்து சேரவேண்டும். இந்தச் சுழற்சியில் கர்ப்பிணி பெண்கள் விதிவிலக்கல்ல! தென் மாகாணத்தில் உள்ள வேலைத்தளங்களில் இவர்களுக்குத் தேநீர் கிடையாது. மலையகம் முழுவதுமே வேலைசெய்யும் இடங்களில் தோட்டத் தொழிலாளர்களுக்கென்று கழிவறை கிடையாது. கழிவறைகள் இல்லாத வேலைத்தளம் உலகிலேயே இதுவொன்றாகத்தான் இருக்கவேண்டும்.

இவ்வாறான விடயங்கள் ஒவ்வொன்றும் பறைசாற்றி நிற்கின்றது மலையகப் பெண்களின் மகளிர் தினம் எத்தகையதென்பதை? அத்தினம் மலையகப் பெண்களின் உரிமைகளை வென்றெடுக்கும் தினமாக மாறவேண்டும். தாமாக தமது உரிமைகளை வென்றெடுக்க துணியாத வரையிலும் எம் உரிமைகள் வெறும் எழுதப்பட்ட காகிதத்தில் மட்டுமே என்பதைக் கூற கவலைக்கிடமாக இருக்கிறது. பெண்களுக்கு எதிரான எத்தனையோ அத்துமீறல்கள் தினம்தினம் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. அதனை மறுக்கவோ, மறைக்கவோ எத்தனிக்க முடியாது. அந்தவகையில், பெண்களின் உரிமைகள் பறிக்கப்பட்ட பல சந்தர்ப்பங்கள் பல

இடங்களில் நடந்தேறிவரும் நிலையில் மாத்தறை மாவட்டத்தில் தெனியாய பிரதேசத்தில் நடந்த சில உண்மை சம்பவங்களை நான் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

தெனியாய மொறவக்க பகுதியில் தனியார் தோட்டத்தில் வாழும் இரண்டு பிள்ளைகளின் தாயொருவரை அவரது கணவன் விட்டுச் செல்கிறார். அதனைத் தொடர்ந்து அவருடன் சமாதானமாகி தன் வாழ்க்கையை வாழ விரும்பாத அந்தப் பெண் விவாகரத்து வழக்கினைத் தொடர்கிறாள். அவர் வழக்கு பதிவுசெய்த காலங்களில் கொரோனா பரவல் அதிகமாக காணப்பட்டது. இக்காலப்பகுதியில் வழக்குக்கான திகதியை அறிவித்து இவருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால், அக்கடிதம் சரியான நேரத்திற்கு இவரை வந்தடையவில்லை. இதனால், அந்தப் பெண்ணால் உரிய நேரத்துக்கு குறித்த வழக்குக்கு போகமுடியவில்லை. அதனைத் தொடர்ந்து நீதிமன்றம் அந்தப் பெண்ணின் மீது பிடியாணை பிறப்பித்தது. மொறவக்க பொலிஸார் குறித்தப் பெண்ணை கைதுசெய்து பொலிஸ் நிலையத்தில் காவலில் வைத்தார்கள். ஒரு பெண்ணை பெண் பொலிஸார் இல்லாமல் ஆண் பொலிஸாரால் கைது செய்யமுடியாது என்பது சட்டம். ஆனால், அச்சட்டம் அன்று வெறும் காகிதமாக காற்றில் பறந்தது. சட்டம் மக்களுக்காகத்தான் என்றிருந்தால் அப்பெண்ணை கைது செய்ய ஒரு பெண் பொலிஸ் உத்தியோகத்தர் வந்திருக்க வேண்டுமல்லவா? அவ்வாறு கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்ட குறித்த பெண் பயந்து, மன அழுத்தத்திற்கு உள்ளாகி, மாரடைப்பு ஏற்பட்டு பொலிஸ் நிலையத்திலேயே உயிரிழக்கிறார். பூசி மெழுகி அந்தக்கதை மறைக்கப்பட்டுவிட்டது.

**ரிச்லேன்ட் எனும் தனியார் தோட்டத்தில் வசிக்கும் ஒரு பெண்ணின் கணவனுக்கு வலிப்பு நோய் ஏற்பட்டு வேலைக்குச் செல்ல முடியாமல் போகிறது. தனியார்த் தோட்டங்களில் இருவரும் வேலை செய்தால்தான் அங்கு தங்குவதற்கு வீடு கொடுப்பார்கள். இல்லையென்றால் வீடு இல்லை. எனவே, அவர்களை அத்தோட்டத்தில் இருந்து வெளியேற்றுகிறார்கள்.**




பெண்களின் உரிமைகளை பாதுகாக்க வேண்டிய அரச உத்தியோகத்தர்கள், பெண்களை ஒரு பண்டமாக மதிக்கும் முதலாளித்துவ அரசாங்கம், முதலாளித்துவ அரசியல்வாதிகள் எல்லோரும் வாயைமூடி இந்த அநியாயத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பெண் உரிமை எங்கே பாதுகாக்கப்பட்டது?

மேலும் ஒரு சம்பவமாக, தெனியாய கந்திரிப்பான என்ற ஊரில் ஒரு தோட்டத் தொழிலாளிப் பெண் கர்ப்பமாக இருந்திருக்கிறாள். குழந்தைப் பெறும் காலம் நெருங்கவும் வீட்டில் இருந்து குழந்தையைப் பெற்றெடுத்து பின்னர் மகப்பேறுக்கு தோட்டங்களில் வழங்கும் கொடுப்பனவை பெறுவதற்காக தோட்டக் காரியாலயத்திற்குச் செல்கிறாள். அங்கே அவளது கொடுப்பனவை வழங்காமல் அவளுக்கு மனநோயாளி என்று பட்டத்தைக் கட்டி அங்கிருந்து விரட்டுகிறார்கள். பெண் உரிமை எங்கே பாதுகாக்கப்பட்டது? பட்டம் போல் பறக்கவிடப்பட்டது. பத்து மாதம் தன் குழந்தையை வயிற்றில் சுமந்து பெற்றெடுத்த ஒரு தாய் பைத்தியக்காரியாக பட்டம் சூட்டப்படுகிறாள். இவ்வாறான சம்பவங்கள் பெண்களின் உரிமைகள் மேலும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்துவதை நாம் உணரவேண்டும்.

மேலும் மற்றுமொரு உண்மைச் சம்பவத்தை எடுத்துக்கூறினால், ரிச்லேன்ட் எனும் தனியார் தோட்டத்தில் வசிக்கும் ஒரு பெண்ணின் கணவனுக்கு வலிப்பு நோய் ஏற்பட்டு வேலைக்குச் செல்ல முடியாமல் போகிறது. தனியார்த் தோட்டங்களில் இருவரும் வேலை செய்தால்தான் அங்கு தங்குவதற்கு வீடு கொடுப்பார்கள். இல்லையென்றால் வீடு இல்லை. எனவே, அவர்களை அத்தோட்டத்தில் இருந்து வெளியேற்றுகிறார்கள். விரட்டப்பட்டப் பின் வாடகை வீடொன்றில் வாழவேண்டிய நிலைக்கு அக்குடும்பம் தள்ளப்படுகிறது. குடும்பச் சுமை முழுவதும் அப்பெண்ணின் தலையில் சுமத்தப்படுகிறது. வீட்டுக்கு வாடகை கட்டவேண்டும்,




தன் நோய்வாய்ப்பட்ட கணவனை பாதுகாக்க வேண்டும், பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப வேண்டும், சாப்பிட வேண்டும், உயிர்வாழ வேண்டும் என்ற சிந்தனை அப்பெண்ணை நெருக்குகிறது. இவர் மாத்திரமல்ல கணவனை இழந்த எத்தனையோ மலையகப் பெண்கள் வாழவழியின்றி, ஆறுதலுக்கும் ஆள் இன்றி ஏங்கித் தவித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

12, 13 வயதிலிருந்து இந்நாட்டிற்காக உழைத்து எத்தனையோ தோட்டத் தொழிலாளிப் பெண்கள் உயிரை விட்டிருக்கிறார்கள். தம் குடும்ப உறவுகளால், சமூகத்தால் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட எத்தனையோ பெண்கள் எம்மில் ஏராளம். எத்தனையோ பெண்களின் உரிமைகளும் கனவுகளும் மறுக்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் மறுக்கப்பட்டு வருகிறதென்பது மறைக்கப்பட்ட உண்மையாகும். இன்றைய முதலாளித்துவ அரசியல்வாதிகளாலும் பெண்களின் உரிமைகள் பறிக்கப்படுகிறது. அதுமட்டுமல்லாது, மார்ச் மாதம் 08 ஆம் திகதி மட்டுமே பெண்களை நினைவுகூர்ந்து வாழ்த்து தெரிவித்து மறுநாள் மறந்துச் செல்லும் எத்தனையோ பேரை நாம் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். உலகப் பெண்களுக்கு கிடைத்த உரிமைகளில் சொச்சம் கூட எம் மலையகப் பெண்களுக்கு இன்னமும் கிடைக்கவில்லை என்பதுதான் உண்மை.

எதிர்வரும் மார்ச் மாதம் 08 ஆம் திகதி எத்தனை மலையகப் பெண்கள் மகளிர் தினத்தைக் கொண்டாடுவார்கள்? சந்தேகத்திற்குரியதுதான். மார்ச் 08 இல் தான் மகளிர் தினம் என்பதுகூட எம் மலையகப் பெண்களில் பலருக்கத் தெரியாதவொன்றாகத்தான் இருக்கும். எனவே, ஒவ்வொரு பெண்ணும் முழு உரிமையும் பெற்று வாழவேண்டும். மகளிர் தினத்தின் மகத்துவத்தை எல்லோரும் அறிந்து மதிப்பளிக்க வேண்டும்.

“சும்மா கிடைக்க சுதந்திரமும் உரிமையும் சுக்கா, மிளகா கிளியே” என்ற பாரதிதாசனின் கேள்விக்கேற்ப எமக்கான உரிமையை நாம் சும்மா பெற்றுவிட முடியாது. இதுவரை பெறப்பட்ட ஓரிரு உரிமைகளும் யாரோ எவரோ போராடி எமக்கு வாங்கித் தந்தவைகளே! இனி எமக்கும் எமது அடுத்த சந்ததிக்குமான உரிமைகளை நாம் தான் வென்றிட வேண்டும்.

**அமைப்பாக அணித்திரண்டு போராடுவோம். உரிமைகளோடு வாழும் புதுக் கதவுகளைத் திறந்திடுவோம்.**



# மென்மை

கருங்கறையேறிய; ஒருபோதுமே நிறம் திரும்பா
அந்த விரல்களின் அழகுதான் எங்கே?
இல்லை,
பெண்மைக்கே உரித்தான அந்த மென்மைதான்
எங்கே?

கவ்வாத்து காட்டில் தொலைந்த நடுவிரலில்
மேற்பாதிதான் எங்கே?
இல்லை,
அது சிந்திய குருதியின் கிரயம்தான் எங்கே?

அடிபாதம் வெடிப்பாகி, அட்டைகள் பதம் பார்த்து
தழும்புகளையே உடுத்தியிருக்கும்
அந்தப் புனித பாதங்களின்
அம்மணம் தான் எங்கே ?

பைசா கோபுரமாய் கூனி வரும் ஊர் பெருசுகளின்
உறிஞ்சப்பட்ட வலிமை தான் எங்கே?
அந்த வைர கால்களின் வல்லமைதான் எங்கே?

அறுபது ஆகியும் ஒய்வு மறுத்து
வெறும் எண்ணுறு கூலிக்காய்
புலரும்முன்னே சிட்டென பறக்கும் ஊர் கிழவிகள்
தொலைத்த இளைமை தான் எங்கே?
அந்த உழைப்பின் சொச்சம்தான் எங்கே ?

தினம் தினம் புள்ள காம்பராவின் கூக்குரலுக்கு
காதடைத்த எங்கள் அர்ப்பணத்தின் விளைவு
தான் எங்கே?
நீங்கள் வாயில் போட்டுக்கொண்ட மேலதிக
இராத்தல்கள் தான் எங்கே ?
திருடப்பட்ட எங்கள் கல்வி தான் எங்கே?
கொழும்பில் கொத்தடிமையாக்கப்பட்ட எங்கள்
நேற்று தான் எங்கே?
கனவுகள் மாய்ந்துபோன எங்கள் நாளை தான்
எங்கே?

உறிஞ்சப்பட்ட எங்கள் உழைப்பு தான் எ........ அட
விடுங்களேன்
உறிஞ்சியது போக மீந்திருப்பதை நக்குவதாய்
திருடப்பட்ட சந்தாக்கள் தான் எங்கே?
எங்கே? களின் பிடிமுனை கைகளின் அதன்
மறுமுனை தான் எங்கே?

மாற்றத்தின் கால வெளியில் இவையெல்லாம்
உழைப்பாகி உபரியாகி பணமாகி
பத்திர சொத்தாகி ஏன் சுவிஸ் கணக்குகளாகி
கப்பல்களே வந்துபோகா துறைமுகங்களாகி
விமானம் இறங்காத ஓடு தளங்களாகி
ஒன்றுக்கும் உதவாத தாமரை கோபுரங்களாகி

அவர்கள் வாரிசுகள் ஓட்டி விளையாடும்
லம்போகினியாகி
எங்கள் மந்திரிகள் ஒய்யாரமாய் வந்துபோகும்
டிபெண்டர்களாகி
நம்மையே திருப்பி வெளுக்கும்
கண்ணீர் குண்டுகளாகி
குண்டாந்தடிகளாகி
அட சட்டங்களாயுமாகி

அது தேசிய பொங்கலாகி ஒய்யார மேடையாகி
வந்துசென்ற இந்திய அழகிகளின் பேமெண்டாகி
மீண்டும் நம்மை செக்கு மாடாக்கும்
வித்தைகளாகின்றது

அவ் ஒய்யார மேடைகளின் கீழ் அண்ணார்ந்து
வாய்பிளந்திருக்கும்
உன்னைத்தான்,
நிகழுலகம் திரும்பு
சிறைப்பட்ட சிந்தனைகளில் சம்மட்டி பாய்ச்சு
மயக்கம் தெளி
சிறகவிழ்
கலகம் செய்.

தோழமையுடன் கல்கியூர்
நிரோஷன்



# காடாக மாறும் ஹொரகொல்லை தோட்டம்

**A.R.ரொஹான்**
**விந்துலை**

மாறிமாறி நாட்டை நிர்வகித்த அரசாங்கங்களின் தனியார் மயப்படுத்தல், குத்தகைக்கு விடல், தனியாருக்கு விற்பனை செய்தல் போன்ற செயற்திட்டங்களின் அடிப்படையில் காலத்துக்குக் காலம் பெருமளவான நிறுவனங்கள் நட்டமாக்கப்பட்டு மூடப்பட்டு வருகின்றன. இதற்கிணங்க பல்வேறு தேயிலைத் தோட்டங்களும் காலத்துக்குக் காலம் தனியாரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. அந்தவகையில், ஜனவசம நிர்வாகத்தின் கீழ் இயங்குகின்ற நாகஸ்தன தோட்டத்தின் ஹொரகொல்ல பிரிவின் தற்போதைய நிலைமை தொடர்பாகவே இந்தக் கட்டுரையில் நாம் ஆராயவுள்ளோம்.



தோட்ட நுழைவில் காணப்படும் மரம்

நாகஸ்தனை தோட்டத்தின் ஹொரகொல்லை பிரிவு நாவலப்பிட்டிய நகரத்திலிருந்து சுமார் 16 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. நாவலப்பிட்டிய நகரத்திலிருந்து ஹட்டன் பாதையில் சுமார் 5 கிலோமீற்றர் தூரம் பயணித்து பலாந்தொட்ட சந்தியில் பிரிகின்ற பாதையினூடாக 11 கிலோமீற்றர்கள் பயணித்தால் இந்த தோட்டத்தை சென்றடையலாம். சில வருடங்களுக்கு முன் இந்த வீதிக்கு காபட் போடப்பட்டது. ஹொரகொல்லை பிரிவை அண்மிக்கும் இடத்தில் காபட் பாதை நிறைவடைந்துவிடுகின்றது. தோட்டப்பாதையானது பயன்படுத்த முடியாதளவுக்கு மிகவும் மோசமாக காணப்படுகின்றது. ஒரிரு பேருந்துகள் மட்டுமே ஒரு சில தடவைகள் சேவையில் ஈடுபடுகின்றன. மறுபுறம் எட்டியாந்தோட்டை நகரிலிருந்து கந்தளோயா, நாகஸ்தனை வழியாக இங்குச் செல்ல பாதை காணப்பட்டாலும் வாகனப்போக்குவரத்துக்கு

பொருத்தமற்றதாகவே இந்தப் பாதை காணப்படுகின்றது.

கரடுமுரடான பாதையைக் கடந்து தோட்டத்திற்குள் பிரவேசிக்கும் இடத்தில் அழகிய ஆலமரத்தின் விழுதுகள் ஒன்றையொன்று ஆரத்தழுவியவாறு அமையப்பெற்ற இயற்கை நுழைவாயில் ஒரு இனம்புரியாத இன்பத்தை கண்களுக்குள் பாய்ச்சுகின்றது. மலைப் பள்ளங்களிலுள்ள கற்பாறைளில் ஊற்று நீர் வழிந்தோடுகின்றது. கிணறுகளில் நிரம்பிக் காணப்படுகின்ற நீரின் மத்தியில் தாமரைப்பூக்கள் சிரித்துக்கொண்டிருக்கின்றன. நீரோடைகளில் ஓடுகின்ற தெளிந்த தூய நீர் இந்த தோட்டத்தின் நீர் வளத்திற்குச் சான்றாகும். சிறந்த மண்வளம் கொண்ட இத்தோட்டத்தில் குளிர்ப் பிரதேசங்களில் விளையும் பயிர்கள், தாவரங்கள் விளையும். அதேவேளை தென்னை, திப்பிலி, கொரக்காய்ப் புளி, நாவல், ஏலக்காய், மிளகு, ஜம்பு போன்ற உஷ்ண பிரதேசத்துக்குரிய பயிர்கள், தாவரங்களும் சிறப்பாக விளைகின்றன.

இப்படி பல வளங்கள் இத்தோட்டத்தில் காணப்பட்டபோதும் இங்கு வாழும் மக்களின் சமூகப் பொருளாதார வாழ்நிலை இதற்கு நேர்மாறாகவே காணப்படுகின்றது.

இந்த தோட்டத்தில் சில வருடங்களுக்கு முன்னர் உருவான தாவர வகையொன்று சுமார் 140 ஏக்கர் தேயிலைத் தோட்டத்தை ஆக்கிரமித்து அழிவடையச் செய்துவிட்டதாக மக்கள் ஆதங்கப்படுகின்றனர். இதனை ஆங்கிலத்தில் Autograph Tree அல்லது Pitch Apple என்றும், சிங்கள மொழியில் ගල් ගොරකා அல்லது ගල් ඉද්ද என்றும் குறிப்பிடுகின்றனர். இத்தோட்ட மக்களால் தமிழில் புளிச்ச மரம் என்று குறிப்பிடப்படுகின்றது.

தோட்ட நுழைவாயிலுக்கு அருகிலேயே கைவிடப்பட்ட மடுவம் (பெரட்டு களம்) பாழடைந்த நிலையில் காணப்படுகின்றது. இந்த தோட்டத்தின் தேயிலைத் தொழிற்சாலையானது பத்து வருடங்களாக இயங்காமல் மிகவும் பாழடைந்து காணப்படுகின்றது. இந்த தோட்டத்தை தனியாருக்கு விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் திரைமறைவில் இடம்பெறுவதாக தோட்ட மக்களூடாக அறிய முடிகின்றது. பல நிறுவன உரிமையாளர்கள் தோட்டத்தையும் தொழிற்சாலையையும் பார்வையிடுவதும் செல்வதுமாக உள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது. பாழடைந்த நிலையில் காணப்படுகின்ற கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் தோட்ட உத்தியோகத்தர் இல்லங்கள், தேயிலை தொழிற்சாலை, தோட்ட வைத்தியசாலை, லயன் அறைகள், ஐயனார் கோவில், புளிச்ச மர

**இந்த தோட்டத்தில் சில வருடங்களுக்கு முன்னர் உருவான தாவர வகையொன்று சுமார் 140 ஏக்கர் தேயிலைத் தோட்டத்தை ஆக்கிரமித்து அழிவடையச் செய்துவிட்டதாக மக்கள் ஆதங்கப்படுகின்றனர். இதனை ஆங்கிலத்தில் Autograph Tree அல்லது Pitch Apple என்றும், சிங்கள மொழியில் ගල් ගොරකා அல்லது ගල් ඉද්ද என்றும் குறிப்பிடுகின்றனர். இத்தோட்ட மக்களால் தமிழில் புளிச்ச மரம் என்று குறிப்பிடப்படுகின்றது.**

காடுகளினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தேயிலை தோட்டங்கள் என்பன இனம்புரியாத சோகத்தை மனதிற்குள் கொண்டுவருவதை என்னவோ தவிர்க்க முடியவில்லை.

இங்குள்ள பிள்ளைகள் தங்களது கல்வி தேவைகளுக்காக நாகஸ்தனை தோட்டத்திலுள்ள பாடசாலைக்குச் செல்ல வேண்டியுள்ளது. இது மிகவும் கரடு முரடான பாதையில் அரை மணிநேர நடை பயணத்தின் மூலமாகவே இந்தப் பாடசாலைக்குச் செல்ல வேண்டியுள்ளது. பஸ் போக்குவரத்து கிடையாது. இன்னும் சிலர் நாவலபிட்டிய நகரத்திலுள்ள பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்புகின்றனர். எனவே, இங்குள்ள கல்வி கற்கும் சிறுவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். நேரத்திற்கு பஸ் போக்குவரத்து இல்லாததால் பாடசாலைக்கு நேரத்திற்குச் செல்லவோ மீண்டும் வீட்டுக்கு உரிய நேரத்துக்குத் திரும்புவதிலோ பெரும் சிரமங்களை இவர்கள் எதிர்கொள்கின்றனர்.





கைவிடப்பட்ட muster shed




மேம்படுத்தப்படாத
சிறுவர் அபிவிருத்தி நிலையம்




சேதமடைந்துள்ள
தேயிலைத் தொழிற்சாலை

தற்போது நடுத்தர வயதினைக் கொண்டுள்ள பலர் தங்களுடைய பிள்ளைப் பருவத்தில் பாடசாலை வசதிகள், போக்குவரத்து வசதிகள் இல்லாதமையினாலேயே தம்மால் கல்வி கற்க முடியாது போனதாகவும் இந்த துர்பாக்கிய நிலை தமது பிள்ளைகளுக்கு வந்துவிடக் கூடாது எனவும் அங்கலாய்க்கின்றனர்.

இத்தோட்டத்தில் வாழ்ந்த பல குடும்பங்கள் போதிய வருமானமின்மை, தொழில் தேவைகள், பிள்ளைகளின் கல்வி தேவைகள் போன்ற காரணங்களுக்காக இங்கிருந்து குடிபெயர்ந்துவிட்டனர். அத்தோடு, இங்குள்ள இளைஞர்களில் பெரும்பாலானோர் கொழும்பிலுள்ள உணவகங்களில் பணிபுரிந்து வருகின்றனர். ஏறக்குறைய 30 குடும்பங்கள் மட்டுமே இங்கு வாழ்ந்து வருவதோடு முதியவர்களே பெரும்பாலும் தோட்டத்தில் எஞ்சியுள்ளனர். தீபாவளி, திருவிழா, பொங்கல் போன்ற பண்டிகைகளின் போது கொழும்பிலுள்ள இளைஞர்கள் தமது தோட்டத்திற்கு வருகை தந்து விழாக்களை தங்கள் உழைப்பின் மூலம் ஈட்டிய பணத்தைக் கொண்டே நடத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு ஒரு சிறு எண்ணிக்கையிலான வாக்காளர்கள் காணப்படுவதினாலோ என்னவோ மலையகத்தின் பிரதிநிதிகள் தாங்கள்தான் என்று மார்தட்டிக் கொள்ளுகின்ற மலையக அரசியல்வாதிகள் இந்த தோட்டங்களை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை என மக்கள் விசனப்படுவதை பார்க்க முடிகின்றது.

இந்தத் தோட்டமானது மாறி மாறி ஆட்சி செய்த கொள்ளைக்கார ஆட்சியாளர்களினாலோ தோட்ட நிர்வாகத்தினராலோ கண்டுகொள்ளப்படாமல் புறக்கணிக்கப்பட்டு வருகின்றமையை இங்கு செல்கின்ற அனைவராலும் உணர்ந்துகொள்ள முடியும். இந்த நிலை என்று மாறும்? எம் வாழ்வில் எப்போது விடியல் வரும்? எமது பிள்ளைகள் எப்போது ஏனைய பிள்ளைகளைப் போன்று அனைத்து உரிமைகள் சலுகைகளையும் பெற்று சமத்துமிக்க மனிதர்களாக மிளிர்வர்? என்கின்ற ஏக்கமே இங்கு வாழ்கின்ற அனைத்து மக்களின் கண்களிலும் தெரிகின்றது.

# இந்திய வீட்டுத்திட்டத்தில் பேர்போட்டுக்கொள்ள முண்டியடிக்கும் மலையக அரசியல்வாதிகள்

**சதீஸ் செல்வராஜ்**

மலையக மக்களின் தீர்க்கப்படாத பல அடிப்படை உரிமைப் பிரச்சினைகளில் காணியுரிமையும் வீட்டுரிமையும் பிரதானமானது. பிற்படுத்தப்பட்ட பொருளாதாரம் எவ்வாறு மலையகச் சமூகத்தின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறதோ அதைப்போலவே காணியுரிமையும் வீட்டுரிமையும் நம் சமூகத்தின் வளர்ச்சிக்குப் பெருந்தடையாக இருக்கிறது. இலங்கையில் இருநூறு வருடகால வரலாற்றைக் கொண்ட மலையகத் தமிழர் ஏறக்குறைய நூற்றைம்பது வருடகாலமாக லயன் குடியிருப்புகளில் வாழ நிர்பந்திக்கப்பட்டிருப்பது அவலம்.

லயக்குடியிருப்பு யுகத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்க வேண்டிய நவீன யுகத்திலும் கூட இலட்சக்கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் அக்குடியிருப்புகளில் துன்பமிகு வாழ்க்கையை நடத்தி வருகின்றமை வேதனைமிகுந்தது. மலையகம் முழுவதும் 71,650 தனியறை லயவீடுகளில் 81,904 குடும்பங்கள் வசித்து வருகின்றன. 70,229 இரட்டையறை லயவீடுகளில் 76,305 குடும்பங்கள் வசித்து வருகின்றன. தற்போது குடும்பங்கள் பல்கி பெருகியதன் காரணத்தால் மண்சுவரை ஏற்றி இறப்பர், தகரத்தால் அமைத்துக்கொள்ளப்பட்ட 14,316 தற்காலிக கொட்டில்களில் 14,514 குடும்பங்கள் வசிக்கின்றன. அதுமட்டுமன்றி, இயற்கை அனர்த்தங்களில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இன்னமும் மலையகத்தில் அகதி முகாம்களிலேயே தங்கவைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மலையகம் முழுவதும் இற்றுப் போயிருக்கின்ற ஓட்டைக் கூரைகளுடனும் வெடித்து பிளந்திருக்கின்ற சுவர்களுடனும் சேதமடைந்து பாசான் பூத்திருக்கின்ற வடிகான்களுடனும் இன்னமும் ஆயிரக்கணக்கான லயக்குடியிருப்புளும், தற்காலிக கொட்டில்களும், முகாம்களும் மலையகத் தமிழர் வாழும் பிரதேசங்களிலெல்லாம் கூனி நிற்கின்றன. இவை பாதுகாப்பில்லா குடியிருப்புகளாக அடையாளங் காணப்பட்டிருக்கின்றன. இயற்கை அனர்த்தங்களின் போது இடிந்து வீழ்ந்த, வெள்ளத்தில் மூழ்கிய பல லயக்குடியிருப்புகளை பற்றி நாம் அறிவோம். அதைப்போலவே, கடந்த 9 வருடங்களில் ஏறக்குறைய 400 இற்கு மேற்பட்ட லயக்குடியிருப்புகள் தீக்கிரையாகி அழிந்திருக்கின்றன. தவிர, தோட்டத் தொழிலாளர்களிடமிருந்து வலுக்கட்டாயமாக குடியிருப்புகள் பறிக்கப்பட்ட சம்பவங்களும் கூட பதிவாகியுள்ளன.



**மலையகம் முழுவதும் 71,650 தனியறை லயவீடுகளில் 81,904 குடும்பங்கள் வசித்து வருகின்றன. 70,229 இரட்டையறை லயவீடுகளில் 76,305 குடும்பங்கள் வசித்து வருகின்றன. தற்போது குடும்பங்கள் பல்கி பெருகியதன் காரணத்தால் மண்சுவரை ஏற்றி இறப்பர், தகரத்தால் அமைத்துக்கொள்ளப்பட்ட 14,316 தற்காலிக கொட்டில்களில் 14,514 குடும்பங்கள் வசிக்கின்றன. அதுமட்டுமன்றி, இயற்கை அனர்த்தங்களில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இன்னமும் மலையகத்தில் அகதி முகாம்களிலேயே தங்கவைக்கப்பட்டுள்ளன.**

குறிப்பாக தனியார்த் தோட்டங்களில் வாழும் மலையகத் தமிழரின் நிலைமை படுமோசமானது. தோட்டங்களில் பணிபுரிந்தால் மாத்திரமே லயவீடுகளும் கூட வழங்கப்படுகின்றன. இல்லையென்றால், அவர்கள் தோட்டத்தை விட்டே விரட்டியடிக்கப்படுகின்றனர். லயவீட்டை தக்கவைத்துக்கொள்வதற்கு போராடும் சமூகமாகவே தனியார்த் தோட்டத்து தோட்டத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இந்த அரசாங்கமும் மலையக அரசியல்வாதிகளும் இம்மக்களின் வீட்டுப் பிரச்சினையை முதலில் தீர்த்து வைக்கவேண்டும். ஆனால், இவர்களோ தமக்கான வாக்குகள் எங்கு குவிந்து கிடக்கின்றதோ, அரசியல் இருப்பு எந்தப் பிரதேசங்களில் வேரூன்றியிருக்கிறதோ அந்தப்பக்கம் மாத்திரமே வைத்தக்கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த அரசியற் கலாசாரம் முற்றிலும் மாற்றப்பட வேண்டும்.

அதுமட்டுமன்றி, மலையக அரசியல்வாதிகள் அதிகாரம் புரியும் அரச மற்றும் கம்பனிகளுக்கு குத்தகைக்கு விடப்பட்ட தோட்டங்களை எடுத்துக்கொண்டால் அங்கும் மனிதர் வாழ்வதற்கு பொருத்தமான குடியிருப்பு என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது. காலங்காலமாக வீடமைப்புகளைக் காட்டி அரசியல் காய்நகர்த்திவரும் கூட்டம் சொச்ச வீடுகளை அமைத்துக்கொடுத்தே மக்களை ஏமாற்றி வருகின்றனர். கண்டி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் மக்களுக்கு வாழமுடியாத லயக்குடியிருப்புகளே எஞ்சி நிற்கின்றன. அதுப்போலவே, பதுளை மாவட்டத்தில் ஹல்தும்முல்லயில் ரோஸ்பெரி, மீரியபெத்த, கொஸ்லந்த, மக்கள்தெனிய, கூல்வத்த, அம்பிடிகந்த, கபரகல போன்ற தோட்டங்களில் லயன்குடியிருப்புகள் சேதமடைந்திருப்பதுடன், மக்கள் வாழவே முடியாத சூழலும் உருவாகியிருக்கிறது. மண்சரிவு அபாயமும் அங்கு நிலவுகிறது. வடிவேல் சுரேஸின் பசறைத் தொகுதியில் ஆக்கரதென்ன, எல்டெப், மடுல்சீமை போன்ற தோட்டங்களையும் சுட்டிக்காட்ட முடியும். அதுப்போல ஜீவனும் திகாவும் வாக்குளை அள்ளியெடுத்த நுவரெலியா மாவட்டம் முழுவதும் இவ்வாறான குடியிருப்புகள் நிறைந்து இருக்கின்றன. குறிப்பாக, குட்டி லன்டன் என்று சொல்லப்படும் நுவரெலியா நகரத்துக்குள்ளேயே ரேஸ்கோஸ்கு அருகில் ஒரு பழைய லயக்குடியிருப்பு இருக்கிறது. மேலும், இரத்தினபுரியில் நீலகாமம், பலாங்கொடயில் பெட்டிகல, சமனலவத்த போன்ற தோட்டங்களையும் இந்த வரிசையில் சுட்டிக்காட்ட முடியும்.

தற்போது தோட்டத் தொழிலாளர்களை தோட்ட நிர்வாகமும் ஏறெடுத்து பார்ப்பதில்லை; அரசாங்கமும் இந்நாட்டு பிரஜைக்கு வழங்கவேண்டிய உரிமைகளை நம் சமூகத்துக்கு வழங்கத் தயாராய் இல்லை. குறிப்பாக, தொடர்ந்து அதிகாரத்தில் இருந்து அரசாங்கங்கள மலையக மக்களுக்கு காணியுரிமையை வழங்குதவற்கு இன்றுவரையும் தயக்கம் காட்டியே வந்திருக்கின்றன. இவ்வாறான நிலையில், வசதிபடைத்த 5 சதவீதமானவர்கள் மட்டுமே மலையகத்தை விட்டு வெளியில் சென்று சொந்தமாக காணிகளையோ, வீடுகளையோ வாங்கிக்கொள்கிறார்கள். 10 சதவீதமானவர்கள் அரச தோட்டங்களில் இருக்கும் தமது லயவீடுகளை திருத்திக்கொள்கிறார்கள். பெரும்பாலும் இதற்கு செலவாகும் பணம் வாழ்நாள்

**தனியார்த் தோட்டங்களில் வாழும் மலையகத் தமிழரின் நிலைமை படுமோசமானது. தோட்டங்களில் பணிபுரிந்தால் மாத்திரமே லயவீடுகளும் கூட வழங்கப்படுகின்றன. இல்லையென்றால், அவர்கள் தோட்டத்தை விட்டே விரட்டியடிக்கப்படுகின்றனர். லயவீட்டை தக்கவைத்துக்கொள்வதற்கு போராடும் சமூகமாகவே தனியார்த் தோட்டத்து தோட்டத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இந்த அரசாங்கமும் மலையக அரசியல்வாதிகளும் இம்மக்களின் வீட்டுப் பிரச்சினையை முதலில் தீர்த்து வைக்கவேண்டும்.**

முழுவதும் தேயிலைத் தோட்டங்களில் உழைத்து மிஞ்சிய ஓய்வூதியத்தில் இருந்தே எடுக்கப்படுகிறது. இவ்வாறு திருத்தியமைக்கப்படும் வீடுகளும் கூட அம்மக்களுக்கு சட்டரீதியாக சொந்தமாவதில்லை. இப்படியிருக்க, வாழவே வழியில்லாது தவிக்கும் ஏனைய தோட்டத் தொழிலாளர்களின் நிலை என்ன? அரசாங்கமும் மலையக அரசியல்வாதிகளும் இவர்களின் வாழ்க்கையை மேம்படுத்த எவ்வித நடவடிக்கைகளையும் எடுத்ததாகத் தெரியவில்லை. பேச்சு வெறும் பேச்சாக மட்டுமே இருக்கிறது. அதுமட்டுமன்றி, கொண்டுவரப்படுகிற அரசாங்கத்தின் வீட்டுத்திட்டங்களும் கொஞ்சக்காலம் செல்லும்போது மாயமாகிவிடுகின்றன. கேட்டால் அரசாங்கத்திடம் பணம் இல்லை; கஜானா காலியாகிவிட்டது என்று கதையளக்கப்படுகிறது. பெரும்பாலும் அமைத்துக் கொடுக்கப்பட்ட வீடுகளுக்குமான பணத்தைக் கூட தோட்டத் தொழிலாளர்களிடமே வசூழித்தார்கள். கேட்டால் தாம்தான் வீடுகளை அமைத்துக்கொடுத்ததாக மலையக அரசியல்வாதிகள் பீற்றிக்கொள்வார்கள். தற்போது இந்திய வீட்டுத்திட்டத்திலும் இந்நிலமையை அவதானிக்க முடிகிறது. பீற்றலுக்கு மட்டும் இங்கு குறைச்சலில்லை.

அதாவது, இவர்கள் இந்திய நிதியுதவியில் கட்டிகொடுக்கப்படுகின்ற வீட்டுத்திட்டங்களை காட்டி பேர்போட்டுக்கொள்ளும் நிலைமைதான் இருக்கிறது.



இந்தியா முன்வந்து மலையக மக்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக்கொடுப்பது வரவேற்கப்பட வேண்டிய விடயம். ஆனால், அந்த வீடமைப்புத் திட்டங்களிலும் பாரபட்சம் காட்டப்படுவதில் என்ன நியாயம்? கட்சி, தொழிற்சங்கம், சாதி என்று பார்த்து பார்த்து வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன.

இலங்கையில் எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும், எந்த மலையக அரசியற் கட்சி ஆளுங்கட்சியோடு இருந்தாலும் இந்திய அரசாங்கம் தான் வழங்கவேண்டிய உதவியை கட்டாயம் வழங்கும். முன்னர், மைத்திரி–

**இவர்கள் இந்திய நிதியுதவியில் கட்டிகொடுக்கப்படுகின்ற வீட்டுத்திட்டங்களை காட்டி பேர்போட்டுக்கொள்ளும் நிலைமைதான் இருக்கிறது. இந்தியா முன்வந்து மலையக மக்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக்கொடுப்பது வரவேற்கப்பட வேண்டிய விடயம். ஆனால், அந்த வீடமைப்புத் திட்டங்களிலும் பாரபட்சம் காட்டப்படுவதில் என்ன நியாயம்? கட்சி, தொழிற்சங்கம், சாதி என்று பார்த்து பார்த்து வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன.**

ரணில் ஆட்சியில் தமிழர் முற்போக்கு கூட்டணி இருந்தபோதும் இந்தியா வீடமைப்புத் திட்டங்களுக்கு உதவியது. அதுப்போல, தற்போதும் ரணில் – ராஜபக்ஸர்கள் ஆட்சியில் இருக்கின்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மூலமாகவும் வீட்டுத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. நாளை ஆட்சி மாறி வேறொரு புதிய கட்சி அதிகாரத்திற்கு வரும்போது அக்கட்சியின் ஊடாகவும் இந்தியா மலையக மக்களுக்கான வீடமைப்புத் திட்டத்துக்கான நிதியுதவியினை வழங்கும். ஆக, தனது சட்டைப் பையில் இருந்த பணத்தை எடுத்துக்கொடுத்து வீடுகளை கட்டிக்கொடுப்பதுபோல அரசாங்கமும் மலையக அரசியல்வாதிகளும் பீற்றிக்கொள்ளக் கூடாது. இல்லை, பீற்றிக்கொள்ளத்தான் வேண்டுமென்றால், முதலில் மலையகத் தமிழருக்கு சட்டரீதியான காணியுரிமையை வழங்குங்கள் அல்லது அவ்வாறு காணியுரிமையை வழங்க முடியாது எனில் அதற்கான காரணத்தை வெளிப்படையாக மக்களிடம் கூறுங்கள். சும்மா பம்மாத்துக்காட்டித் திரியவேண்டாம்.



ஜீவன் தொண்டமான் 10 பேர்ச்சில் வீடுகளை அமைத்துக்கொடுப்பதாக கூறியிருந்தார். ஆனால், 7 பேர்ச் அளவில்தான் அடிகல் நாட்டப்பட்டுள்ளதாக சில பிரதேசங்களில் மக்கள் தெரிவிக்கின்றனர். ஆனால், இந்தியா 10 பேர்ச் அளவிளான வீடுகளுக்கே நிதியை ஒதுக்கியிருக்கிறது. அப்படியிருக்க இங்கு நடப்பது என்ன? இதைப்பற்றி வீடமைப்பை எடுத்துச்செல்லும் குழுவினர் கருத்திற்கொள்ள வேண்டும். தவறுகள் திருத்திக்கொள்ளப்பட வேண்டும். அதுமட்டுமல்லாது, பாராளுமன்றிலும் குடும்பத்துக்குள் குடுமிச் சண்டைகள் வேறு. போட்டிப் பொறாமை நிறைந்த இச்சண்டைகளில் அதிகாரத்துக்கான போட்டி நிறைந்திருக்கிறது.

நிலைமைகள் இவ்வாறு இருக்க தோட்டத் தொழிலாளர்கள் வேடிக்கை பார்க்கும் பொம்மைகளாக மாற்றப்பட்டிருக்கிறார்கள். ஆண்டாண்டு காலமாக அரங்கேற்றி வரும் கூத்துக்களை மலையக அரசியல்வாதிகள் புதுபுது டிசைனில் தொடர்ந்து காண்பித்துக் கொண்டிருக்கிறார்கள். இலங்கை அரசாங்கத்தின் திரைக்கதைக்கு ஏற்பவும் ஆட்டம் படுஜோராகவிருக்கிறது.

இந்தக் கூத்துக்களின் பின்னணியில்தான் தோட்டத் தொழிலாளர்களின் காணியுரிமையும் மறுக்கப்பட்டிருக்கிறது. குறைந்தபட்சம் இதுவரையில் இலங்கையை ஆட்சி செய்த அரசாங்கங்களும் மலையக அரசியற் கட்சிகளும் தம் பங்கிற்கு தோட்டத் தொழிலாளர்களுக்கு கட்டிக்கொடுக்கப்படுகின்ற வீடுகளுக்கு உத்தியோகபூர்வ உரித்தையாவது வழங்குதற்கு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்களா? இல்லை. இம்முறை இ.தொ.கா. சௌமிய பூமித்திட்டம் என்று சின்னக்கர ஒப்பு வழங்குவதாக கூறியிருக்கிறார்கள். மலையக மக்களுக்கு உரித்துடன் உரிய வீடுகளை பாரபட்சமின்றி வழங்கினால் மகிழ்ச்சி. அதற்கு எமது முழு ஆதரவை வழங்குகின்றோம். ஆனால், கிரியெல்ல ஒப்பு போன்ற ஒன்றுக்கும் உதவாத வெற்றுப் பத்திரத்தை மறுபடி கொடுத்து மக்களை ஏமாற்றிவிட வேண்டாம்.

அதுப்போல, அரசாங்கம் 2024 வரவு செலவுத் திட்டத்திலும் பெருந்தோட்ட மக்களின் குடியிருப்பு விடயம் குறித்து பெருந்தொகை நிதியை ஒதுக்கியுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் பாராளுமன்றில் வரவு செலவு உரை நிகழ்த்தப்பட்டது. இந்த திட்டத்தில் பெருந்தோட்டங்களைச் சார்ந்த மக்களின் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக 4625 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன், பெருந்தோட்ட மக்களுக்கு உரித்துடன் காணிகளை வழங்குவதற்கு 4000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், இதுவரையில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவில்லை.



மலையக அரசியல்வாதிகளும் இந்த விடயத்தில் அமைதிகாக்கிறார்கள். தம்புள்ளையில் சிங்கள சமூகத்திற்கு ரணில் விக்ரமசிங்க காணிகளுக்கு உறுதிப்பத்திரத்தை வழங்கிய போதிலும் பெருந்தோட்ட மக்களுக்கு இதுவரையில் இவ்வாறான நடவடிக்கை எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. ஆக, மலையக சமூகத்தை மீளவும் ஏமாற்றி வாக்குகளை கொள்ளையடிப்பதற்கான திட்டத்தில் ஆளுங்கட்சியினர் களம் இறங்கியிருக்கின்றனர்.

ஆக, இக்கும்பல் வாய்க்கிழிய விதம் விதமாக பல கதைகளைக் கூறிக்கொண்டு மட்டுமே இருக்கிறார்கள். இவர்கள் இந்தியா புரியும் உதவியில் தங்களது பேரைப்போட்டுக்கொள்ள முண்டியடித்துக்கொண்டு இருக்கிறார்கள். இலங்கை அரசாங்கத்தின் சார்பில் எவ்வித வேலைத்திட்டங்களை எடுக்கத் தயாரில்லாத நிலை காணப்படுகிறது. இவர்கள் கோமாளிக் கூத்துக்களை காண்பித்து மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆக, மக்கள் தான் இவற்றை விளங்கிக்கொள்ள வேண்டும். வேறென்ன சொல்ல?

# ரணிலுக்கு எதிராக கட்டியெழுப்பப்படுகின்ற ரணில் புனைகதை

இந்த வருடத்தில் ஜனாதிபதி தேர்தலை நடாத்துதல் அரசியலமைப்பின் பிரகாரம் கட்டாயமானதாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோட்டாபய ராஜபக்ஷவின் எஞ்சிய பகுதியை பூர்த்திசெய்த பின்னர் ஜனாதிபதி தேர்தலுக்கு போட்டியிடத் திட்டமிட்டு வருகின்றமை தெளிவாகப் புலனாகின்றது. மொட்டு உறுப்பினர்களாலும் அதற்கு அனுசரணை வழங்குகின்ற சஜித் அணியைச் சேர்ந்தவர்களுமான 134 பேர்களின் வாக்குகளாலேயே அவர் ஜனாதிபதியானார். 2022 ஜூலை மாதத்தில் அவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட பின்னர் "ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக ரணில் விக்கிரமசிங்க புனைகதையைக் கட்டியெழுப்புதல்" என்பதற்காகவே இற்றைவரை ரணில் விக்கிரமசிங்க செயலாற்றியிருக்கிறார். ஜனாதிபதி தேர்தலில் "பொது வேட்பாளர்" என்ற பெயரிலேயே ரணில் விக்கிரமசிங்க முன்வருகிறார். ரணில் விக்கிரமசிங்கவிற்காக ரணில் விக்கிரமசிங்க கட்டியெழுப்புகின்ற "பொது வேட்பாளர்" இறுதியில் எதிர்ப்பதன் மூலமாகவே இந்த மண்ணில் யதார்த்தமாகி உள்ளது.




நன்றி: Sisil Fernando

"ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான ரணில் விக்கிரமசிங்க" புனைகதையைக் கட்டியெழுப்புவது என்பது ஒருசில வேளைகளில் மேலெழுந்தவாரியாக நோக்கினால் விளங்கிக்கொள்ள முடியாது. ஒருசில எடுத்துக்காட்டுகள் மூலமாக அதனை விளங்கிகொள்ள முடியும். ஒரு புனைகதையாக அமைவது "எவருமே முன்வராத நேரத்தில் ஜனாதிபதிநிலையை" ஏற்றுக்கொண்டமையாகும். இது முற்றிலும் ஒரு புனைகதையாகும். 2022 ஜூலை மாதத்தின் இறுதியில் பாராளுமன்றத்தில் பின்தொடர்கின்ற

**பிரியதர்ஷன தயாரத்ன**
**தமிழில் : மகேந்திரன் கிறிஸ்டோபர்**

> ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான ரணில் விக்கிரமசிங்க" புனைகதையைக் கட்டியெழுப்புவது என்பது ஒருசில வேளைகளில் மேலெழுந்தவாரியாக நோக்கினால் விளங்கிக்கொள்ள முடியாது. ஒருசில எடுத்துக்காட்டுகள் மூலமாக அதனை விளங்கிகொள்ள முடியும். ஒரு புனைகதையாக அமைவது "எவருமே முன்வராத நேரத்தில் ஜனாதிபதிநிலையை" ஏற்றுக்கொண்டமையாகும்.



ஜனாதிபதியொருவரை தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பில் அநுர திசாநாயக்கவும் டலஸ் அழகப்பெருமவும் பங்கேற்றார்கள். அநுர திசாநாயக்கவிற்கு 03 உறுப்பிர்களின் வாக்குகளும் டலஸ் அழகப்பெருமவிற்கு 88 வாக்குகளும் ரணில் விக்கிரமசிங்கவிற்கு 134 வாக்குகளும் கிடைத்தன.

மற்றுமொரு பிரதானமான புனைகதையாக தற்போது வெளிவந்துகொண்டிருப்பது முனைப்பாக செயலாற்றுகின்ற ஒருவராக காட்டிக்கொள்வதாகும். வெளிநாட்டு விஜயங்களில் பரவலாக பங்கேற்றல், மாநாடுகளில் உரைநிகழ்த்துதல், அரச உத்தியோகத்தர்களை சந்தித்தலும் அச்சுறுத்துதலும், அரச தலைவர் என்றவகையில் பாடசாலை மாணவர்களை சந்திப்பதிலிருந்து சாதாரண பொதுமக்களுக்கு உறுதிகளை வழங்குதல் என்பவற்றுடன் நின்றுவிடாமல் வெளிநாட்டு சுற்றுலா வலயங்களுக்குச்சென்று வெளிநாட்டவர்களை சந்தித்தல் வரையான செயற்பாடுகளும் இவை மத்தியில் அடங்குகின்றன. மற்றுமொரு பிரதானமான புனைகதையாக அமைவது பொருளாதாரத்தை மீட்டெடுத்துவிட்டதாக பிரச்சாரம் செய்வதில் அதிக நாட்டம் செலுத்துவதாகும். ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக ரணில் விக்கிரமசிங்க கட்டியெழுப்பிக் கொண்டிருக்கின்ற ஏனைய புனைகதைகளை தரவுகள் ஊடாக சுட்டிக்காட்டுவது சிரமமானதாகும். எனினும் பொருளாதாரத்தை மீட்டெடுத்ததாக கூறிவருகின்ற புனைகதையை தரவுகள் மூலமாக தீர்த்துவைக்க முடியும். அவ்விதம் தீர்த்துக்கொள்ள வேண்டியதும் அத்தியாவசியமானதாகும்.

இந்த இடத்திலிருந்து அது சம்பந்தமாக உள்ள நிலைமையை உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களை ஊடறுத்து கண்டுபிடிக்க முனைவோம். இதற்கான அண்மித்த பின்னணி ரணில் விக்கிரமசிங்க கடந்த பெப்ரவரி 07 ஆந் திகதி பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையின்போது பலவிடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. தரவுகளை சமர்ப்பித்தலும் அந்த தரவுகளில் மறைக்கப்பட்டுள்ள உண்மைகளின் யதார்த்தம் என்னவென்பதையும் அதிலிருந்து மிகவும் கவனமாக தேர்ந்தெடுக்கவேண்டும்.

அவர் ஜனாதிபதி பதவிக்காக தெரிவுசெய்யப்பட்ட பின்னர் பெற்றுக்கொடுத்த வெற்றிகள் பற்றி விபரித்துவருகின்ற அதேவேளையில் மேற்படி உட்பொருளில் உள்ளடக்கப்படக்கூடாத தரவொன்றும் உள்ளடக்கப்பட்டிருந்தது. அது அரசாங்கத்தின் ஒட்டுமொத்த கடன் அளவு 2023 செப்டெம்பர் இறுதியளவில் 91 பில்லியன் டொலர் என்பதாகும். அது ரணில் விக்கிரமசிங்கவினால் கட்டியெழுப்பப்படுகின்ற ரணில் விக்கிரமசிங்க புனைகதைக்கு பாரிய அனர்த்தம் விளைவிக்கின்ற யதார்த்தமாகும். அதனால் ரணில் விக்கிரமசிங்விற்கு எதிராக கட்டியெழுப்பப்படுகின்ற புனைகதையாகவே அது அமைந்தது. ஏன் அவ்வாறு கூறப்படுகின்றது? இது பற்றி ஆழமாக ஆராய்ந்துபார்க்க வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெற்றுக்கொள்வதற்காக நிதியமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் 2022 ஆம் ஆண்டில்

இறுதியளவில் அரசாங்கத்தின் ஒட்டுமொத்த கடன் அளவு 83 பில்லியன் டொலர் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது, உள்நாட்டுக் கடன் அளவு 42 பில்லியன் டொலர் எனவும் வெளிநாட்டுக் கடன் அளவு 41 பில்லியன் டொலர் என்றவகையிலாகும். இதன்படி ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் 09 மாதங்களுக்குள் அரசாங்கக் கடன் அளவு 08 பில்லியன் டொலரால் அதிகரித்தது. அண்ணளவாக 250,000 கோடி ரூபாவாகும். இந்த கடன் உயர்வடைகின்ற அளவினை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு 2024 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய ஒரு தரவு மீது எமது விசேட கவனத்தை செலுத்துவேண்டியது அவசியமாகும்.

அது இந்த வருடத்திற்கான கடன் வட்டி செலுத்துவதாகும். அதற்காக 2651 மில்லியன் ரூபா அதாவது 265,100 கோடி ரூபா செலவாகுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் பொருளாதாரப் பேச்சாளரான பந்துல குணவர்தன உள்ளிட்ட குழுவினர் வட்டி செலுத்துகின்ற சுமையை முற்றாகவே மறைத்துவைக்க பாரிய பிரயத்தனம் செய்துகொண்டிருக்கிறார்கள். அரச ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் ஓய்வூதியம் செலுத்துவதற்கான சுமையை, பொது மானியம் செலுத்துகின்ற சுமையை பாரிய மலையாக எடுத்துக்காட்டி வட்டி மேட்டின் சுமையை மறைத்துவைப்பதற்கான பெரும் பிரயத்தனம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

“

**சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெற்றுக்கொள்வதற்காக நிதியமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் 2022 ஆம் ஆண்டில் இறுதியளவில் அரசாங்கத்தின் ஒட்டுமொத்த கடன் அளவு 83 பில்லியன் டொலர் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது, உள்நாட்டுக் கடன் அளவு 42 பில்லியன் டொலர் எனவும் வெளிநாட்டுக் கடன் அளவு 41 பில்லியன் டொலர் என்றவகையிலாகும். இதன்படி ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் 09 மாதங்களுக்குள் அரசாங்கக் கடன் அளவு 08 பில்லியன் டொலரால் அதிகரித்தது. அண்ணளவாக 250,000 கோடி ரூபாவாகும்.**

இத்தகைய பெருமளவிலான கடன் வட்டியைச் செலுத்த பிரதான காரணமாக அமைந்தது வெளிநாடுகளிலிருந்து கொள்ளைவட்டிக்கு பன்னாட்டு இறையாண்மை முறிகள் மூலமாக பெற்றுக்கொண்ட கடன்களாகும். ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை வகித்த 2015 தொடக்கம் 2019 வரையான காலப்பகுதிக்குள் மிக அதிகமான இறையாண்மை முறிக் கடன்தொகையான 1300 கோடி டொலர் பெறப்பட்டிருந்தது. மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் 2007 ஆம் ஆண்டிலேயே முதன்முதலாக இறையாண்மை முறிக்கடன் சந்தையில் பிரவேசித்தது. ரணில் விக்கிரமசிங்கவே கிளட்டினுக்கு நாட்டை மிகுந்த வேகத்தில் தள்ளினார். வட்டி செலுத்துகின்ற சுமை கட்டுக்கடங்காமல் செல்கின்ற விதத்தை நன்றாக விளங்கிகொள்ள 2000 ஆண்டின் தொடக்கம்மீது சற்று கவனஞ் செலுத்தவேண்டியது பொருத்தமானது.

மத்திய வங்கி அறிக்கையின்படி இந்த புத்தாயிரமாம் ஆண்டில் தொடக்கத்தில் வட்டிசெலுத்துவதற்கான செலவு 7,120 கோடி ரூபாவாகும். அது 2024 அளவில் 265,100 கோடி ரூபா வரை 3723% ஆல் அதிகரித்துள்ளது. அது 24 வருடங்களுக்குள் ஆகும். நாங்கள் கடந்த சில அண்மித்த வருடங்களில் கடன் வட்டி செலுத்துகின்ற செலவுகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதும் மற்றுமொரு பக்கத்தில் நிலைமையின் பயங்கரமானதன்மையை விளங்கிக்கொள்ள முக்கியமானதாக அமைகின்றது. 2021 இல் 1048 மில்லியன் ரூபா, 2022 இல் 1370 பில்லியன் ரூபா மற்றும் 2023 இல் 2193 பில்லியன் ரூபா என்ற வகையிலாகும். இதற்கிணங்க தெளிவாவது 2022 இல் வட்டி செலுத்துவதற்கான செலவான 1370 பில்லியன் ரூபா அளவானது இரண்டு வருடங்களுக்குள் இருமடங்காகி 2651 பில்லியன் ரூபாவாக மாறியுள்ளதென்பதாகும். ரணில் விக்கிரமசிங்கவினால் கட்டியெழுப்பப்படுகின்ற ரணில் விக்கிரமசிங்க புனைகதை திடீரென ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான ரணில் விக்கிரமசிங்க புனைகதையாக இவ்வாறே மாறுகின்றது.

ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் வெளிநாட்டு ஒதுக்கங்களை கட்டியெழுப்புவதையே பிரதான விடயமாக மேலோங்கச் செய்வித்தார். 2023 ஆம் ஆண்டு நிறைவடைகையில் அதனை 4.4 பில்லியன் டொலர் வரை வளர்த்தெடுக்க இயலுமானதென கூறியுள்ளார். அது வெறுமனே ஒரு இலக்கமே தவிர நாட்டின் பொருளாதாரம் பெற்ற வெற்றியல்லவென்பது பலதடவைகள் நிரூபிக்கப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கி சமர்ப்பித்த புதிய அறிக்கை "நிதிக்கொள்கை அறிக்கை 2023 பெப்ரவரி" என்பதாகும். அதன் 33 ஆவது பக்கத்தில் 4.4 பில்லியன்

**மத்திய வங்கி அறிக்கையின்படி இந்த புத்தாயிரமாம் ஆண்டில் தொடக்கத்தில் வட்டிசெலுத்துவதற்கான செலவு 7,120 கோடி ரூபாவாகும். அது 2024 அளவில் 265,100 கோடி ரூபா வரை 3723% ஆல் அதிகரித்துள்ளது. அது 24 வருடங்களுக்குள் ஆகும். நாங்கள் கடந்த சில அண்மித்த வருடங்களில் கடன் வட்டி செலுத்துகின்ற செலவுகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதும் மற்றுமொரு பக்கத்தில் நிலைமையின் பயங்கரமானதன்மையை விளங்கிக்கொள்ள முக்கியமானதாக அமைகின்றது. 2021 இல் 1048 மில்லியன் ரூபா, 2022 இல் 1370 பில்லியன் ரூபா மற்றும் 2023 இல் 2193 பில்லியன் ரூபா என்ற வகையிலாகும். இதற்கிணங்க தெளிவாவது 2022 இல் வட்டி செலுத்துவதற்கான செலவான 1370 பில்லியன் ரூபா அளவானது இரண்டு வருடங்களுக்குள் இருமடங்காகி 2651 பில்லியன் ரூபாவாக மாறியுள்ளதென்பதாகும்.**

டொலர் இலக்கம் பற்றி வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஒதுக்கச் சொத்துக்கள் எனப்படுகின்ற துணைத் தலைப்பில் கீழே காட்டப்பட்டவாறே விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டிருந்தன.

“மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கங்கள் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவாகிய 1.9 பில்லியன் டொலருடன் சார்புரீதியாக 2023 ஆம் ஆண்டின் இறுதியளவில் 4.4 பில்லியன் டொலராக உயர்வடைந்தது. 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் இறுதியில் நிலவிய மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கத்தில் சீன மக்கள் வங்கியிடமிருந்து பெற்ற ஏறக்குறைய 1.4 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் பெறுமதிகொண்ட பன்னாட்டு அந்நிய செலாவணி பரிமாற்ற வசதிகளும் உள்ளடங்கி இருந்ததோடு அது பாவனைக்கு எடுப்பதற்கான நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டதாகும். உள்நாட்டு, வெளிநாட்டு செலாவணிச் சந்தையிலிருந்து மத்திய வங்கி உறிஞ்சிக்கொண்ட 1.7 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் (பெறுமதியை அடிப்படையாகக்கொண்ட திகதிக்கிணங்க) கணிசமான தேறிய வெளிநாட்டு ஒதுக்கங்களின் அளவு சர்வதேச நாணய நிதியத்தின் விரிவான கடன் வசதிகளில் தெரிவிக்கப்பட்ட இரண்டு கடன் தவணைகளில் இருந்து கிடைத்த 648 பில்லியன் டொலர் ஐக்கிய அமெரிக்க டொலரும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்தும் உலக வங்கியிடமிருந்தும் கிடைத்த பெறுகைகளும் மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கங்களின் இந்த கணிசமான அதிகரிப்பிற்கு பிரதானமாக உதவியுள்ளது.”

மேற்கொள்ளப்பட்டிருப்பது என்னவென்பது மிகவும் தெளிவாகின்றது. நாட்டுக்குள் உற்பத்திகளை வளர்த்தெடுத்து வெளிநாடுகளுக்கு எற்றுமதி



செய்வதன் மூலமாக பெறப்பட்ட அந்நிய செலாவணி மூலமாக சேமித்த ஒதுக்கமல்ல. அங்குமிங்கும் கட்டியெழுப்பிக்கொண்ட கடன்கள் மூலமாக உண்டியலை நிரப்பிக்கொள்வதாகும். அதேவேளையில் உண்மையாகவே அந்நிய செலாவணி ஒதுக்கத்தை சேகரித்தலில் தாக்கமேற்படுத்துகின்ற வெளிநாட்டு ஏற்றுமதி வருமானம் 2022 ஆம் ஆண்டினைவிட 2023 ஆம் ஆண்டில் வீழ்ச்சியடைந்துள்ளது. 2022 இல் ஏற்றுமதி வருமானம் 13,106 மில்லியன் டொலரில் இருந்து 2023 ஆம் ஆண்டு நிறைவடைகையில் 11,911 மில்லியன் டொலர்கள் வரை 1,195 மில்லியன் டொலர்களால் வீழ்ச்சியடைந்துள்ளது. ரணில் விக்கிரமசிங்க ஆட்சி கடைப்பிடிக்கின்ற பொருளாதாரத்தை சுருக்குகின்ற செயற்பாங்கிற்கு சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்புரைகளே காரணமாக அமைந்தன. மேற்படி பணிப்புரைகளை அமுலாக்கியதன் நேரடியான பெறுபேறுகள் ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சியடைந்ததன் மூலமாக தெளிவாகின்றது. அவ்விதமாக சீரழிகின்றவேளையில் நாணய நிதியத்திடமிருந்து வட்டியுடன் மீளச்செலுத்தவேண்டிய கடனாக 648 மில்லியன் டொலர் பெறப்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலை இலக்காகக்கொண்டு முன்னெடுத்துவருகின்ற பிரச்சார செயற்பாங்கொன்றும் இருக்கின்றது. 20 இலட்சம் காணி உறுதிகளை வழங்குதல், அஸ்வெசும வறுமை நிவாரணம் வழங்குதல் மற்றும் குடும்பமொன்றுக்கு 20 கிலோ அரசி வழங்குதல் அவை மத்தியில் முதன்மையானவையாகும். அவற்றில் 20 இலட்சம் காணி உறுதிகள் வழங்குவதன் உண்மையான பொருளாதார உபாயமார்க்கமானது தற்செயலாக பெப்ரவரி 18 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை அரசாங்கத்தின் சிலுமின செய்தித்தாளிலேயே வெளிக்கொணரப்பட்டிருந்தது. "எதிர்வரும் ஒருசில மாதங்களில் காணி விலை வீழச்சியடையும்" எனும் தலைப்பில் பிரசுரிக்கப்பட்டிருந்த செய்தித்தாளின் பொருளடக்கம் மூலமாக அது வெளிப்பட்டுள்ளது. " 20 இலட்சம் மக்களுக்கு விற்கக்கூடிய அடகு வைக்கக்கூடிய காணி உறுதிகள் கிடைத்ததன் மூலமாக இந்நாட்டின் சந்தையில் காணி வழங்கல் அதிகரிப்பதும் அதற்கு காரணமாக அமைகின்றதென அவர்கள் கூறுகிறார்கள்."

அண்மைக்கால வரலாற்றில் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பேணி வருவதற்காக மிகப்பெரிய புனைகதையை மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய இருவருமே கட்டியெழுப்பினார்கள். யுத்தத்தை நடாத்தி வருதல் மற்றும் அதனை முடிவுக்கு கொண்டுவருதலை அடிப்படையாகக்கொண்டு மகிந்த ராஜபக்ஷவிற்காக 2006 – 2014 காலப்பகுதிக்குள் பாரிய புனைகதைகள் கட்டியெழுப்பப்பட்டன. அதற்குள்ளே ஏனைய அனைத்தையுமே மூடிமறைக்க இயலுமாயிற்று. அவரே கூறியுள்ளவாறு ஒன்பது வருடங்களாக நிறைவேற்று ஜனாதிபதி முறையை அனுபவித்த பின்னர் தோல்வியுற்றார். மகிந்த ராஜபக்ஷவை விஞ்சிச் செல்கின்ற மிகப்பெரிய புனைகதைகளால் கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரத்திற்கு கொண்டுவரப்பட்டார். அதன் பிரதான பங்கு யுத்தத்தை நெறிப்படுத்திய "மாபெரும் சூத்திரதாரி" என்றே வகிக்கப்பட்டது. போதாக்குறைக்கு உயிர்த்தஞாயிறு தாக்குதலும் களணிய நாகபாம்பும் ஆட்டப்பட்டது. அந்த புனைகதைகள் அனைத்துமே அவருக்கு எதிரான சக்ராயுதமாக மாறி 30 மாதங்களில் மக்களால் விரட்டியடிக்கப்படுகின்ற நிலைக்கு புனைகதைகள் மண்கௌவின.

**மகிந்த ராஜபக்ஷவிற்காக 2006 – 2014 காலப்பகுதிக்குள் பாரிய புனைகதைகள் கட்டியெழுப்பப்பட்டன. அதற்குள்ளே ஏனைய அனைத்தையுமே மூடிமறைக்க இயலுமாயிற்று. அவரே கூறியுள்ளவாறு ஒன்பது வருடங்களாக நிறைவேற்று ஜனாதிபதி முறையை அனுபவித்த பின்னர் தோல்வியுற்றார். மகிந்த ராஜபக்ஷவை விஞ்சிச் செல்கின்ற மிகப்பெரிய புனைகதைகளால் கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரத்திற்கு கொண்டுவரப்பட்டார். அதன் பிரதான பங்கு யுத்தத்தை நெறிப்படுத்திய "மாபெரும் சூத்திரதாரி" என்றே வகிக்கப்பட்டது. போதாக்குறைக்கு உயிர்த்தஞாயிறு தாக்குதலும் களணிய நாகபாம்பும் ஆட்டப்பட்டது. அந்த புனைகதைகள் அனைத்துமே அவருக்கு எதிரான சக்ராயுதமாக மாறி 30 மாதங்களில் மக்களால் விரட்டியடிக்கப்படுகின்ற நிலைக்கு புனைகதைகள் மண்கௌவின.**

அதே பாதையில் பயணிக்கின்ற ரணில் விக்கிரமசிங்க 2022 ஆரம்பம்வரை கட்டியெழுப்பியிருந்த லிபரல் ஜனநாயக உருவத்தையும் முற்றாகவே நாசமாக்கிவிட்டார். தற்போது "ரணில் விக்கிரமசிங்கவிற்காக ரணில் விக்கிரமசிங்க புனைகதையை" கட்டியெழுப்பப்போய் மிகவும் கவலைக்கிடமான தலைவிதியை அடைந்துள்ளார். அது "ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான ரணில் விக்கிரமசிங்க புனைகதையாக" மாறியதன் மூலமாகும்.



# இலவசங்களால் ஏமாற்றப்பட்டவன்

அரிசி, பருப்பு
அண்டா குண்டா
சினோபாம், பைசர்
புதுப்பானை, பச்சரிசி – பொங்கல்
இப்படி - இலவசம் என்றால்
அவன் முகம்
இளித்துக் கொள்ளும்.

இலவசப் பட்டியலில்
முதல் பெயராய்
அவன் இருக்க
தோட்டத்து தலைவர் முதல்
தொண்டர் வரை
தரை தொடும் - அவன் வாய்

இலவசங்களால்
இறைக்க இறைக்க
இறுகிப் போயிருந்தது
அவனது கிணறும்
அதில் வாழும் தவளைகளும்

அன்றும்
வெளிநாட்டு அரிசி வாங்க
விடிய முன்னம் - போனவன்
நெரிசலில்
வெந்து சிதறி
மண்ணில் கிடக்க
இலவசமாய் ஏற்றி இறக்க
வண்டி வர மறுத்ததால்
புழுவாய் நெளிந்து – துடித்தான்

அவனிலிருந்து வெடித்து பீறிட்டு
கிளம்பிய இரத்த நெடியில்
பச்சை வாசம் பரவிதான் இருந்தது.
அந்தோ… பெரிய மலைகளை
மடுவாக்கிய கைகள்
மண்ணில் புரள
சாத்தானின் வேதங்களின்
உச்சாடணம் தூரமாகிட
கலியுக அவதார புருசர்களின்
வரவுக்காய் காத்திருந்து காத்திருந்து
இலவசங்களால் ஏமாற்றப்பட்டவன்
இனிதே விடைப் பெற்றுச் சென்றான்.

மாரிமுத்து சசிரேகா



# போதைப்பொருள் சந்தையாக மாணவர்கள்

**எம். ராமதாஸ்**
**இறம்பொடை**




ஒரு நாட்டின் நாளைய எதிர்காலமாய் ஒளிவிளக்காய் மாறிவிடுவதில் மாணவர்களினதும் இளைஞர்களினதும் பங்கு அளப்பரியது. கல்வியும் புலமையுமே நாளைய தேசத்தின் அச்சாணியாக அமையக்கூடியவை. எங்கே ஒரு சமுகத்தில் இளைஞர்களின் எழுச்சியும், மாணவர்களினது கல்வியும் முடக்கப்படுகின்றதோ அங்கே ஒட்டுமொத்த சமுகமும் இருளில் மூழ்கடிக்கப்பட்டு விடுகிறது. என்னதான் ஒரு சமுகமோ அல்லது நாடோ பொருளாதார விடயங்களில் நிறைவுபெற்று காணப்படினும் கல்விக்கு கேடு விளையுமாயின் எல்லாம் நிறைந்திருந்தும் சூன்யமாய் காணப்படுவதற்கு ஒப்பானதாகும். கல்வியும் நற்சிந்தனைகளும் ஒருவனை சிந்திக்க தூண்டுகிறது. அடக்குமுறை ஆதிக்க சக்திகளுக்கு எதிராக போராட எத்தனிக்கிறது. இந்த நிலைமையை கெடுத்துவிட, நாளைய சமுதாயத்தை, எதிர்கால தலைமைத்துவத்தினை நாசம் செய்திட மாணவர்களின் மத்தியில் இன்றைய சூழலில் பரவிவரும் மாபெரும் ஆட்கொள்ளி விசம்தான் இந்த போதைவஸ்து பாவனை.

போதைப்பொருள் மாப்பியாக்களின் சிறப்பான சந்தைப்படுத்தலாக இன்றைய பாடசாலை மாணவர்கள் இருக்கின்றார்கள். இயல்பாகவே புதியவைகளையும் கெட்டவைகள் நல்லவைகள் என்ற பாகுபாடின்றி தீண்டிப்பார்க்கும் மனோநிலைமையை கொண்டமைந்ததும்தான் இளையவர்களின் மனநிலை. இந்த மனநிலையும் சூழலும்தான் அவர்களை இயல்பாக இலாவகமாக போதைப்பொருள் மாப்பியாக்கள் கவர்ந்துவிட ஏதுவாகின்றது. அத்தோடு ஒருமுறை அடிமையாகிவிட்ட பிறகு மீண்டும் அதிலிருந்தான

> **போதைப்பொருள் மாப்பியாக்களின் சிறப்பான சந்தைப்படுத்தலாக இன்றைய பாடசாலை மாணவர்கள் இருக்கின்றார்கள். இயல்பாகவே புதியவைகளையும் கெட்டவைகள் நல்லவைகள் என்ற பாகுபாடின்றி தீண்டிப்பார்க்கும் மனோநிலைமையை கொண்டமைந்ததும்தான் இளையவர்களின் மனநிலை. இந்த மனநிலையும் சூழலும்தான் அவர்களை இயல்பாக இலாவகமாக போதைப்பொருள் மாப்பியாக்கள் கவர்ந்துவிட ஏதுவாகின்றது.**

**குடும்பத்திலிருந்து முதலாவதாக சீர்படுத்தல் தொடங்கவேண்டும். பாடசாலைகளிலும் போதைபொருள் மாப்பியாக்கள் பற்றிய விழிப்புணர்வு செயல்திட்டங்களையும் பாடவிதானத்தில் கூட அதுபற்றிய கற்கைகளை உட்சேர்ப்பதும் மிக மிக அவசியமானதாகும்.**

மீட்சி என்பது இங்கு அரிதாகவே காணப்படுகின்றது. அங்கு மாணவர்களிடையே இரகசியத்தன்மை பேணப்பட்டு இயல்பாக ஏனைய மாணவ சமூகத்திற்கும் பரவிவிடப்படுகின்றது. இது ஒருவகையில் போதை பொருள் வியாபாரிகளின் சிறப்பான சந்தைப்படுத்தல் யுக்திதான்.

மாணவர்கள் தங்களது இளமைப் பருவத்தில் நடாத்தும் அட்டகாசங்களைப் பற்றி சிந்திக்கிறார்களே தவிர அதனால் ஏற்படும் விபரீதங்களைப் பற்றி சிந்திப்பதில்லை. இதன் விளைவாகவே போதைக்கு ஆளாகுகின்றார்கள். திடகாத்திரமாக, ஆரோக்கியமாக, ஆளுமையுள்ளவர்களாக வளர்வதற்கு போதை மற்றும் தீய நடத்தைகள் தடையாக இருக்கின்றன என்பதை உணராமல் இருக்கிறார்கள்.

எந்தவொன்றையும் அனுபவித்துப் பார்க்கவேண்டும் என்ற ஆவலும் ஆசையும் சில நேரம் அவர்களது அழிவுக்கே காரணமாகி விடுகின்றது. நண்பர்களுடன் பழகும்போது சிகரட் புகைத்தல், பியர் குடித்தல் என்ற பழக்கத்துடன் பீடா, பாபுல், பான்பராக், மாவா, ஸாதா என்ற பாவனைக்கு ஆளாகி, இறுதியில் எல்லா போதைக்கும் அடிமைகளாகி விடுகின்றார்கள். தற்போது சிறுபிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும் மருந்துகளையும் போதைக்குப் பயன்படுத்துகிறார்கள். அத்துடன் மூக்குத் தூளையும் பயன்படுத்துகிறார்கள்.

அண்மைய காலங்களில் புகையிலை சம்பந்தப்பட்ட போதைபொருள் பாவனைகளும் அதிகமாக மாணவர்ககளை அடிமைப்படுத்தி விட்டிருக்கிறது. இதற்கு சமூகமும் ஒரு காரணம்தான். வீட்டிலிருந்தே அதற்கான அத்திவாரம் இடப்படுகிறது. பொதுவாக தனது மனோநிலையை ஸ்திரம் என காட்டிக்கொள்ள, வலிமையானவன் என காட்டிக்கொள்ள மாணவர்கள் இந்த நிலையை தொடருகின்றார்கள். சமூக ஊடகங்களின்பால் அதிகமாக ஈடுபாடு கொண்டுள்ள, இன்றைய மாணவ சமூகத்திற்கு போதை பொருட்களை பெற்றுக்கொள்வதென்பது அவ்வளவு கடினமில்லை.

குடும்பம், சமூகம், பாடசாலை, சமூக ஊடகங்கள் என ஒவ்வொன்றுமே மாணவர்களினது போதைபைபொருள் பாவனைக்கு ஏதுவாக அமைகின்றது. கருப்பு சந்தையில் இயல்பாக மாணவர்களை மையப்படுத்திய வியாபாரங்கள் வளர்ந்து கிடப்பதும் குறிப்பிடத்தக்கது.

இவற்றிற்கு தீர்வுகாண்பது சவால்கள் மிக்கதென்றாலும் அவசியமானதாகும். போதைபொருள் பாவனையினால் நாளை உருவாகப்போகும் சிறப்பான ஒரு பிரஜை இன்று மரணித்து விடுகிறான். இதுவே தேசத்தினதும் சமூகத்தினதும் முதல் பேரழிவாகும். ஆகவே, இதுகுறித்தான தீவிர தீர்வுத்தன்மையை தேடுதல் என்பது மிக முக்கியமானதாகும்.

அந்தவகையில் குடும்பத்திலிருந்து ஒவ்வொரு மாணவர்களுக்கானதுமான அரவணைப்பினை, அன்பினை, வெளிப்படைதன்மையினை உறுதிபடுத்துதல் அவசியமானதாகும். இளவயதிலேயே தனிமையும் அரவணைப்பின்மையும், பெற்றோர்கள் அன்யோன்யமாக பழகிடாத சூழலும் கூட பிள்ளைகளை தீய வழியில் தள்ளிவிடும் காரணமாக அமைந்துவிடுகிறது.

குடும்பத்திலிருந்து முதலாவதாக சீர்படுத்தல் தொடங்கவேண்டும். பாடசாலைகளிலும் போதைபொருள் மாப்பியாக்கள் பற்றிய விழிப்புணர்வு செயல்திட்டங்களையும் பாடவிதானத்தில் கூட அதுபற்றிய கற்கைகளை உட்சேர்ப்பதும் மிக மிக அவசியமானதாகும்.

போதைப்பொருள் உயிர்கொல்லி மட்டுமல்ல. எதிர்கால தலைவர்களையும் சமூக புரட்சிகரமான விடயங்களையும் கொலைசெய்ய கூடிய ஒன்று. அதை தடுக்க அனைவரும் செயல்பட வேண்டியது கட்டாயமானது.

# வியர்வையில் வந்த வெள்ளாமை

நிவேதா ஜெகநாதன்

சிறுகதை



இராத்திரி ஆக்கிய சோற்றில் இருந்த மீதியை இரண்டு பச்சை மிளகாயும் உப்பும் இட்டு தூக்கு போணியில் எடுத்துக் கொண்டு தோட்டத்தை நோக்கி புறப்பட்டான் சின்னசாமி. காலை வெயில் ஆரம்பிக்க வேலையும் சுறுசுறுப்பாக இருக்கும் என்ற எண்ணத்தில் சென்றவனுக்கு அங்கு ஒரு பேரதிர்ச்சி காத்திருந்தது.

இராத்திரி பெய்த அடைமழை அவனது தோட்டத்தை மட்டுமல்ல பக்கத்திலுள்ள மொத்த தோட்டத்தையும் ஒரு வழி செய்திருந்தது. சற்று இறக்கத்தில் உள்ள நிலங்களாகையால் அடைமழை பெய்யும்போது ஆரூர்பட்ட வெள்ளமும் அந்த இறங்கிய தரை பக்கம்தான் ஒதுங்கிப் போகின்றது. வளர்ந்து பிஞ்சும் பூவுமாய் இருந்த கத்தரி செடிகளும் போஞ்சிக் கொடிகளும் எண்ணி எடுக்க கூட இல்லாமல்போனது. தலையில் கையை வைத்துக்கொண்டு பதறிப்போயிருந்தவனை பக்கத்து தோட்டத்துக் காரர் “உங்க தோட்டமுமா?” என்று வாயிலே கை வைத்தார்.

ஒன்றரை மாதத்திற்கு முன்னர் தண்ணீரே இல்லாமல்

அடித்த வெயிலில் காய்ந்து கருகிப்போன செடி கொடிகள் விளைச்சலின்றியே வீண் போனது. வீட்டுக்காரியின் கழுத்து காதில் போட்டிருந்த மிச்ச நகையை எடுத்து ஆசாரி கடையில் அடகு வைத்து அஞ்சுபத்து குறைத்து வாங்கி வந்து போட்ட விதைகள் வளர்ந்ததை கண்டு, இது கடன் அடைக்க உதவும் என்று எண்ணி பெருமூச்சு விடும் முதலே இப்படி நாட்டு நட்ட இடம் தெரியாமல் அரித்து, அழித்துப் போனது அந்த கொடூர மழை. கேட்டபோதெல்லாம் வஞ்சவமில்லாமல் போட்டிருக்கும் ஒற்றை மூக்குத்தி வரையிலும் கழற்றி தந்த அவளின் கையில் இனி எந்த நகையும் இல்லையே. இப்படி நடந்ததென்று கேள்விபட்டாலே உடைந்து போய்விடுவாளே. அடுத்த விளைச்சலில் வரும் ஒரு பங்கை கொண்டு வாயும் வயிறுமாயிருக்கும் மூத்த பிள்ளைக்கு சோறு கட்டி போடவேண்டும் என்ற மனக்கோட்டைக் கட்டிக் கொண்டிருந்தவளுக்கு இது ஒரு பெரிய தாக்கம்தான்.

சின்னசாமி ஒன்றும் நேற்றைய ஆள் இல்லை. ஆனால், மண்வெட்டியை எடுத்து அவன் பாத்தி கொத்து அழகை பார்த்தால் ஆடவனைப் போல இருக்கும். பார்ப்போனுக்கும் தானும் இறங்கி பாத்தி கொத்த வேண்டும் என்று தோன்றும். அத்தனை அம்சமாக இருக்கும் அவனது அங்க அசைவுகள். பத்து வயதில் டவுனு பாய் கடையில் சாக்கு அடுக்கும் வேலைக்கு சேர்ந்தவன், அந்த பாய் கடை தான் அவனுக்கு வீடு சொர்க்கம் எல்லாமே! அவனை வளர்த்து ஆளாக்கி கலியாணம் செய்து இரண்டு பிள்ளைகளுக்கும் ஐந்து வயது வரையிலும் அந்த பாய் கடைதான் சம்பாத்தியமும் சாப்பாடும் தந்தது. பாயின் குடும்பம் ரொம்ப பெரிய குடும்பம். டவுனு கடையென்றால் எல்லாம் பாய் கடைக்குத்தான் செல்லுவார்கள். ஆக்கி அரித்து சாப்பிட அத்தனை சாமானும் அங்குதான் மலிவாய் கிடைக்கும்.

"பாய் இந்த மாசம் காசில்ல கணக்குல வச்சிக்கிட்டு சாமானத்த குடுங்க" என்று கெஞ்சிக் கேட்போரை நம்பி மூட்டை கணக்கில் சாமான்களை வாரி வழங்கும் வள்ளல் அவர்.

"பாய் புள்ளைக்கு ஒடம்புக்கு முடியல, பார்த்து அஞ்சுப்பத்து குடுத்திங்கனா... சம்பளத்துக்கு தந்துருவேன்" என்று கையேந்தும் அப்பாக்களுக்கு எதிர்பார்ப்பின்றி "புள்ள உசுருதான் முக்கியம்" என்று அள்ளி கொடுக்கும் ஏழைகளின் இறைவன் அந்த பாய்.

எல்லாம் இயல்பாகத்தான் நடந்துக் கொண்டிருந்தது, ஜூலைக் கலவரத்தில் ஒருநாள் இரவோடு இரவாக கடையை நெருப்பூட்டி விட்டு போய்விட்டார்கள், அந்த சோகத்தில் நெஞ்சடைத்து மவுத்தாகிப் போனார் அந்த பாய், அதன் பிறகு அவரை நம்பயிருந்தவர்களின் நிலைமை எல்லாம் அதோ கதியாகி போனது. கடையும் பாயின் கடைசி மகன் கைக்கு போய்விட்டது. அது மீண்டும் திருத்தியமைக்கப்பட்டு, பாவனை இல்லாமல் பூட்டி வைக்கப்பட்டிருந்தது. அடுத்த மூன்று நாட்களில் மனைவி பாக்கியத்தோடு சென்று தாலிக்கொடியை அடகு வைத்து, அப்போது தோட்டத்திற்கு சொந்தமாயிருந்த காணியில் கள்ளத்தனமாய் காசு கொடுத்து ஒரு பகுதியை வாங்கி விட்டான் சின்னசாமி. அதற்கு ஏகப்பட்ட பிரச்சினைகள் எல்லாம் எழுந்து வந்தாலும் எல்லோருக்கும் கையில் காசை கொடுத்து காதும் காதும் வைத்தபடி விடயத்தை முடித்து நிலத்தை தனதாக்கியவன் அன்றிலிருந்து அதை நம்பி குடும்ப வாழ்வை ஆரம்பித்து இன்றும் அதைத்தான் தொடர்கிறான்.

இரண்டு பெண் பிள்ளைகளையும் கலியாணம் செய்து கொடுத்து ஒன்று வாழா வெட்டியாக வீட்டிலேயே வந்து இருந்து கொண்டது; மட்டுமொன்று ஐந்து மாத கர்ப்பிணி. எல்லாவற்றுக்கும் அவன் செலவு செய்ய கடமைப்பட்டிருக்கின்றான். பாக்கியம் பதுமையானவள், புதுமையானவளும் கூட. அவள் வீட்டிலிருந்து அப்படி கஸ்ட்ட காலத்திலும் கூட பதினைந்து பவுன் நகைகள் போட்டுக் கொண்டு வந்தாள். அவன் கஸ்டம் என்று கை நீட்டும் போதெல்லாம் மனம் கோணாமல் ஒவ்வொன்றாய் கழற்றிக் கொடுக்கும் புண்ணியவதி. அவனுக்கு அவள் மிகவும் பாக்கியவதிதான்.

தோட்டத்திலிருந்தால் ஒரு வேலையும் ஓடாது என்று கொண்டு வந்த கஞ்சியையும் எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டான் சின்னசாமி. விறகுக்கு செல்ல ஆயத்தமான பாக்கியம், "என்ன இம்புட்டு நேரத்தோட வந்துட்டிஹ" என்றாள்.

"மறுபடியும் வெள்ளாம நாசமா போச்சு, இராத்திரி மழை தோட்டத்த முழுக்க அரிச்சு போட்டுருச்சு" என்று முடியில்லாத மொட்டை தலையை தடவிக் கொண்டு அடுப்படியில் போய் அமர்ந்தான். அந்த வட்டாரமுமே அதுதான் பேச்சு.

"மழை இருந்தாலு துன்பம், இல்லனாலு துன்பம் அத விடுங்க அடுத்த போகத்துல பாத்துக்கலாம்" என்று சாதாரணமாகக் கூறினாள்.

"அடி பாக்கியம்! ஒட்டு மொத்த தோட்டத்தையும் மறுபடி கிண்டிக்கிளறி போடவே போகம் முடிஞ்சி பொயிரும். இந்த ஒடம்புல தெம்பு மட்டுந்தான் இருக்கு

ஜீவன் செத்து போச்சு" என்றான் சின்னசாமி.

அடுத்த இரண்டு நாளில் மழையில் பாதித்த வெள்ளாமை தோட்டத்திற்கு அரசு இலவசமாக விதைகள் தரப்போகிறதாம் என்றார்கள். கிடைக்காது என்று மனம் சொன்னாலும் எதையும் விற்று வாங்கி விடலாம் என்ற நம்பிக்கையில் மீண்டும் தோட்டத்தை கொத்த ஆரம்பித்தார் அவர்.

வெயிலும் மழையும் மாறி மாறி வந்து கொண்டிருக்கின்றது. அவன் வாழ்வில் இன்பம் துன்பம் வருதலை போல, அடை மழைக்காலம் சற்று ஓயத்தொடங்கியது. நிலம் பதமாகியிருந்தது, கொத்துவற்கும் பாத்தியிடுவதற்கும் இலகுவாக இருந்தது.

சின்னசாமி விடிவு முதல் இருளும் வரையிலும் தோட்டமே கதியாய் கிடக்க அவரின் பலம் பாக்கியம் நேரத்திற்கு வாய்க்கு ருசியாக சமைத்து சுடசுட தூக்கு போணியில் போட்டுக் கொண்டு போய் கொடுத்து விட்டு தானும் சேர்ந்து வேலை செய்வாள், ஒரு வாய்க்கு வெற்றிலையை போட்டாளென்றால் போதும் இரண்டு மணித்தியாலத்திற்கு களைப்பில்லாமல் வேலை செய்வாள். மீண்டும் ஒரு வாய்க்கு வெற்றிலை போட்டாளென்றாள் அந்த நாள் முடியும் வரை வேலையில் இருந்து விலக மாட்டாள். அவளுக்காகவே டவுனு பக்கம் போய் புடி கணக்காய் வெற்றிலை பாக்கு வாங்கிக் கொண்டு வந்து விடுவான் சின்னசாமி.

கால்துண்டு கருப்பட்டியும் கொதிக்க கொதிக்க தேயிலைச் சாயத்தையும் ஊற்றிக் கொண்டு நேற்று மலர்ந்தவள் போல குடு குடுவென ஓடி வந்தாள் பாக்கியம்.

"பாத்து நடந்து வா கீழே விழுந்தா முன்னுக்கு மீதியிருக்க மூனு பல்லும் ஒடஞ்சி போகுது" என்று கடிந்தவனை, "இவ்வளவு காலமா இந்தப் பாதையில ஓடி வந்து விழுகல இன்னைக்குத்தான் புதுசா விழுந்துபுட போறானோ?" என்று சிரித்து விட்டு சீவி கவிட்டு போட்டிருந்த சிரட்டையை கிணற்று தண்ணீரில் அலம்பி எடுத்துக் கொண்டு வந்து தேநீரை ஊற்றிக் கொடுத்தாள் பாக்கியம்.

முதல் வாரம் வரும் போது வெற்று நிலமாய் கிடந்த இடம், இப்போது மண் தட்டியிருந்தது. முருங்கையில் கட்டியிருந்த வேலிக்கு இரண்டு பழைய சேலைகளை கொண்டு வந்து முடிந்துவிட்டாள் அவள். பக்கத்து தோட்டங்களிலும் அன்று கூட்டம் இருந்தது. தோட்டத்து லீவு நாளில் குடும்பமாய் வந்து அங்கேயே ஆக்கி அரித்து சாப்பிட்டு பொழுது சாயும்போது பெரிய பானையில் தண்ணீர் கொதிக்கும். வேலையை முடித்து விட்டு அங்கேயே குளித்து விட்டு இரவாகும்போது வீடு செல்லுவார்கள். அதுவும் ஒருசுவாரஸ்யமான வாழ்க்கைதான்.

அவர்களின் தோட்டத்தில் எல்லாம் பெரிய பெரிய வீடுகள் கட்டி வைத்திருந்தார்கள். மண்ணால் வேய்ந்த வீடு. சின்னசாமிக்கு உதவிக்கு யாருமில்லாவிட்டாலும் வேலியில் உள்ள கோரை, மானாவையும், அறுத்து காய வைத்து புல்லால் வேயப்பட்ட குடிசை ஒன்றை செய்திருந்தான். மழை வந்தால் அதில் ஒதுங்கிக் கொள்ளலாம். வேலை செய்து களைத்துப் போனால், சற்று தலைசாய்த்து ஓய்வெடுக்கலாம். சின்னசாமியின் பிள்ளைகள் வீட்டு கட்டிலில் தூங்கியதை விட தோட்டத்து குடிசையில் தூங்கிய நாட்கள்தான் அதிகம்.

அடுத்த தோட்டத்து வேலுவின் மனைவி வேலியை விலத்தி உள்ளே வந்து பாக்கியத்தை அழைத்தாள். "என்னடி புள்ளைகள கூட்டிக்கிட்டு நேரத்தோட தோட்டத்து பக்கமா வந்துட்ட போல" என்றாள் பாக்கியம்.

"ஆமாக்கா, காலையிலேயே வந்து பத்து பாத்திய கொத்திமுடிச்சாச்சு, எங்க வீட்டுக்கார மனுசே மான் ஒன்னு அடிச்சு கொண்டு வந்து நின்னுகிட்டு ஆக்க சொல்லிட்டாருக்கா, அதுதான் ஆக்கினதுல கொஞ்சத்த சூட்டோட எடுத்துட்டு வந்தேன்" என்றாள் அவள்.

வந்தவளுக்கு ஒரு வாய் வெற்றிலையை கொடுத்து அனுப்பி விட்டு குழியிட்ட பாத்திக்கு விதை போட ஆரம்பித்தாள் பாக்கியம். மழைக்கு மட்டையாகிப்போன தட்டத்தரையை கொத்தி பாத்தி செய்து விதையும் விதைத்து விட்டான் சின்னசாமி.

கையும் உடம்பும், அசந்து போய் ஓய்வில் படுத்திருந்த சின்னசாமிக்கு இப்போது எண்ணங்கள் பலவாறாகச் சென்றன. குடும்பத்துக்கு மூத்த வாரிசை கொடுக்கப் போகும் பிள்ளைக்கு சோறு கட்டிப் போடவேண்டும் என்று பல நாட்களாக சொல்லிக் கொண்டிருக்கும் பாக்கியத்தின் ஆசையை நிறைவேற்ற எப்படியாவது ஒரு வழி செய்ய வேண்டும். மழை வந்தால் வெள்ளம் தோட்டத்திற்குள் வராமல் இருப்பதற்கு வேலியை இறுக்கப்படுத்துவதற்கு இரண்டு கம்பித்தூண் போடவேண்டும். பவளம் வைத்த பாக்கியத்தின் ஒற்றை சங்கிலி அதனை எப்படியாவது ஆசாரி கடையிலிருந்து மீட்டு விடவேண்டும். வாக்கப்பட்டு போய் வீட்டோடு வந்து கிடக்கும் வயிற்றில் பிறந்தவளுக்கு இன்னொரு

வாழ்க்கையை எப்படியாவது தேடி கரைசேர்த்து வைத்துவிட்டால் இந்த உயிர் போனாலும் வருத்தப்பட தேவையில்லை.

நாளுக்கு நாள் தோட்டத்தின் ஒவ்வொரு பகுதியும் போட்ட விதைகளும் நாட்டிய கன்றுகளும் வளர்ந்துக் கொண்டிருந்தன. அந்த ஓய்விலிருக்கும் வயதிலும் ஓயாது உழைத்துக் கொண்டிருக்கும் அவனை பார்த்து ஊரிலுள்ளோருக்கும் ஆச்சரியம் தான்.

அவன் வடிவமைக்கும் பாத்திகளும் அவன் எடுக்கின்ற வெள்ளாமையும் வித்தியாசமாகத்தான் இருக்கும். எல்லாம் கைப்பக்குவம். குனிந்து நிமிர்ந்து அவன் செய்யும் வேலைக்கு அவன் உடம்பில் இருந்து கொட்டும் வியர்வைதான் உரம்.

இரவு சாப்பிட்டு விட்டு சகஜமாக பேசிக்கொண்டு ஒரு வாய் வெற்றிலையும் போட்டுக் கொண்டு உறங்கச் சென்ற பாக்கியம், அப்படியே உறங்கிப் போனாள். அத்தனை வயதிலும் ஆசைகளையும் கனவுகளையும் சுமந்துக் கொண்டு ஓடியாடி வேலை செய்துக்கொண்டிருந்தவள் இப்படி மறைந்து போனது சின்னசாமிக்கு அவர்களை நம்பி வாழா வெட்டியாக வீட்டிலேயே வந்திருக்கும் மகளுக்கும் துயரின் உச்சமாய் இருந்தது.

அவளின் மறைவுக்கு பின்னர் வீட்டு வேலையெல்லாம் மகளின் கைக்கு போய்விட்டது. நிறைமாத கர்ப்பிணியாய் வீட்டுக்கு வந்திருந்தவளுக்கு தாயின் கையால் வாய்க்கு ருசியாக சாப்பிடும் பாக்கியம் இல்லாமல் போனது. “அவளுக்கு சோறு கட்டிப்போட வேண்டும்.” மனைவியின் கடைசி ஆசைகள் அவன் காதுகளில் கேட்டுக் கொண்டேயிருந்தது.

16 நாள் காரியம் முடிந்து மீண்டும் தோட்டத்து பக்கம் நடையைக் கட்டிய சின்னசாமியை அவனது வெள்ளாமை தோட்டம் வரவேற்றது. போஞ்சி கொடிகளில் வளர்ந்து அங்கும் இங்கும் மண்ணில் தவழ்ந்தன. அவள் கரையில் நாட்டிய பாகல் தொடங்கி வெள்ளரி வரையிலும் அத்தனையும் விளைச்சல் தருவதற்கு தயாராகி கொண்டிருந்தன. சின்னசாமியின் கண்ணுக்கு எல்லாமே பூரிப்பாக இருந்தது.

இதுவரை தான் நாட்டியபோது வராத பாகல் செடி பல இடமும் படர்ந்து பூத்திருப்பதை பாக்கியம் இருந்தால் பார்த்து பூரித்திருப்பாள். அவளின் கைராசி அவள் நட்ட அத்தனையும் தோட்டம் முழுவதும் வளர்ந்து பந்தலாகிப் போய் கிடக்கின்றன.



அவனது பிரச்சினைகள் அத்தனையும் அத்தோடு முடிந்து போனதை போல இருந்தது. அடுத்த ஒரு மாதத்திற்குள் விளைச்சல் பெரியளவு கிடைத்தது, பாக்கியம் ஆசைப்பட்ட அத்தனையும் சின்னசாமியால் நிறைவேற்றப்பட்டது. ஆரோக்கியமாக பிறந்த அந்தப் பேரக்குழந்தை பாக்கியத்தின் மறுஜென்மமாக உணர்ந்தான் அவன். பாக்கியத்தின் அடகு வைத்த கழுத்து சங்கிலியை மீட்டு பேரக்குழந்தையின் கழுத்தில் போட்டு அழகு பார்த்தான் அவன். அத்தனையும் அவன் வியர்வையில் வந்த வெள்ளாமையால் கிடைத்த பயன்.

# தீமையை விலக்கி நன்மை பயக்கும் காட்டேரியம்மன் வழிபாடு

ராசையா கவிஷான்
கேம்பிரி - லிந்துலை



இலங்கையில் பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்காக தென்னிந்தியாவில் இருந்து அழைத்துவரப்பட்டு, இலங்கையின் மலைநாட்டுப் பகுதிகளில் குடியேற்றப்பட்ட மக்களே மலையக மக்கள் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் அனைவரும் கூலித்தொழிலுக்காக அழைத்துவரப்பட்டவர்களே! இவ்வாறு வந்த மக்கள் தங்களது உடைமைகளுடன் உறவுகளுடன் அங்கு பேணி பாதுகாத்து வந்த கலை கலாச்சார பண்பாட்டு அம்சங்களையும் சுமந்து வந்தனர்.

ஆங்கிலேயரின் ஆட்சியின் போது காணப்பட்ட அடக்கு முறையாலும், உழைப்புக்கு ஏற்ற ஊதியம் இன்மையாலும் மனதளவில் பெரிதும் பாதிக்கப்பட்ட இவர்கள் அவ்வப்போது அந்தக் கலை கலாச்சார பண்பாட்டு அம்சங்களையும் மீட்டிப்பார்த்தனர். அவ்வாறு மீட்டியவையே இன்றும் புழக்கத்தில் உள்ள கூத்துக்களும் சடங்குமுறைகளும் ஆகும். அன்று ஆறு மணி ஆகிவிட்டால் எல்லா வீடுகளிலும் புராண கதைகளும், கூத்துப் பாடல்களும் முழங்கிக் கொண்டிருக்குமாம். இவை எம் மக்களுக்கு இன்பத்தையும் மன அமைதியையும் அள்ளித்தந்தன. மலையகத்தில் எமது முன்னோர்கள் எமக்கு அளித்த கலைகள் பல உள்ளன. அவையாவன பொன்னர் சங்கர் கூத்து, காமன் கூத்து, அர்ச்சுனன் தபசு, நல்லத்தங்காள் கதை, வீரபத்திரன் ஆட்டம், காட்டேரியம்மன், லவ குசா என்பனவாகும். நாம் இக்கட்டுரை வழியே மலையகத்தில் நிலைத்தோங்கியிருக்கும் காட்டேரியம்மன் வழிபாடு பற்றியே பார்க்கப் போகிறோம்.

### காட்டேரியம்மன்

அன்றைய கால மனிதன் இயற்கை கூறுகளால் வரும் பாதிப்புக்களை தடுப்பதற்காக நீர், நெருப்பு, மரம், கல் என இயற்கையுடன் சார்ந்தவைகளை கடவுளாக எண்ணி வழிபட்டான். அவ்வாறு மழையை வேண்டியும் மழையினால் வரும் அனர்த்தங்களை கட்டுப்படுத்த வேண்டியும் மாரியம்மனை வழிபட்டனர். மகிமைமிக்க மாரியம்மனின் அவதாரங்களில் ஒன்றுதான் இந்த கரிய நிற தோற்றமுடைய காட்டேரியம்மன்.

இலங்கை திருநாட்டில் இயற்கை எழில்மிகு நுவரெலியா மாவட்டத்தில் தேயிலை மலைகளும் கலை, கலாச்சாரமும் கலந்த அழகிய கிராமம்தான் லிந்துல சென்றகுலர்ஸ் தோட்டம். மலையகத்தின் தனித்துவம்மிக்க கலைகளான காமன் கூத்து, பொன்னர் சங்கர் கூத்து, காட்டேரியம்மன், குறவஞ்சி ஆட்டம், காவடி, கோலாட்டம் போன்றவை இவ்வூரில் இன்றும் உயிர்ப்புடன் இயங்குவதை காணலாம். இந்த வரிசையில் மிக முக்கியமான ஒன்றுதான் காட்டேரியம்மன் திருவிழா.

இந்தியாவில் இருந்து வருகை தந்த பெருந்திரளான கூழித்தொழிலாளர்களில் பெரம்பலூர், நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த மக்கள் லிந்துல சென்றகுலர்ஸ் தோட்டத்தில் குடியமர்த்தப்பட்டனர். இன்றும் இந்தியாவின் பெரம்பலூர், நாமக்கல் போன்ற மாவட்டங்களிலேயே இந்தக் காட்டேரியம்மன் விழா வெகுவிமர்சையாக கொண்டாடப்படுகின்றது. இலங்கையில் சென்றகுலர்ஸ் தோட்டத்தில் மாத்திரமே காட்டேரியம்மன் திருவிழா கொண்டாடப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

### இன்றைய வழிபாட்டு முறை

பங்குனி மாதம் என்றாலே அது திருவிழா மாதம்தான். எல்லா ஊர்களிலும் 5 அல்லது 7 நாட்கள் குதூகலமாக இருக்கும். கொடிமரம் நட்டு, கரகம் பாலித்து, பாற்குட பவணி, உள்ளூர் வளம், வெளியூர் வளம், மஞ்சள் நீராட்டு விழா என பயபக்தியாக காணப்படும். அதைப்போலவே, இந்த சென்றகுலர்ஸ் தோட்டத்திலும் திருவிழா காலம் ஆரம்பித்துவிட்டால் போதும் சுற்றியுள்ள அத்தனை ஊருக்கும் இன்ப மழை தான். திருவிழா ஆரம்பத்தின் பின்னர் என்னவாக இருந்தாலும் சரி செவ்வாய்க்கிழமையை காட்டேரியம்மனுக்காக ஒதுக்கி விடுவர். ஆம்! பங்குனி மாதம் திருவிழா ஆரம்பித்து செவ்வாய்கிழமைதான் காட்டேரியம்மன் திருவிழா நடைபெறும்.

**இலங்கையில் சென்றகுலர்ஸ் தோட்டத்தில் மாத்திரமே காட்டேரியம்மன் திருவிழா கொண்டாடப்படுகிறது.**

திங்கட்கிழமை நள்ளிரவு 12 மணிக்கு காட்டேரியம்மன் வேடம் தரிப்பவர் பிறந்த மேனியுடன் சுடுகாட்டிற்கு செல்வார். அங்கு சென்று காட்டேரியம்மனுக்கு சூடம், தேசிக்காய், பால், முட்டை என்பவற்றை படையல் வைப்பார். படையல் வைத்து வழிபட்ட பின்னர் காட்டேரி வேடம் தரிப்பவருக்கு அருள் வரும். காட்டேரியம்மன் ஆற்கொண்ட பின்னர் அம்மன் தெரிவு செய்த இடத்திலிருந்து சுடுகாட்டு மண்ணை எடுத்துக்கொண்டு அதிகாலை 3 மணியளவில் வீட்டுக்கு வந்து மண்ணை ஒழித்து வைப்பார். அதன் பின்பு குழுவில் உள்ளவர்கள் காலை 6 மணிக்கு இந்த மண்ணை பெற்று சலித்து காட்டேரியம்மனுக்கு வீட்டினுல் படைத்து வேடம் தரிப்பவரின் அணிகளனுடன் வைப்பர்.

பின்பு காட்டேரி வேடம் தரிப்பவர் வேடமணிந்து தயார் நிலைக்கு வருவார். அப்பொழுது கரிய நிறவுருவம், கருமை நிற உடைகள், வெளிதள்ளிய நாக்கு, இரத்தம் தோய்ந்த உதடுகள், கோரைப்பற்கள், தலைவிரி கோலம், கையில் சுளகு, காலில் சதங்கை என காட்டேரி அச்சமூட்டும் தோற்றமளிப்பாள். அதேப்போல் எதிரணியாகவும் அரக்கர்களாகவும் தயார் நிலையில் இருக்கும் ஒன்பது அல்லது பதினொரு பேர் கொண்ட குழுவினர் மிகவும் கருப்பாகவும், உடல் முழுவதும் கருப்பு நிற அரிதரம் பூசி, கருப்பு நிற காற்சட்டை அணிந்து, காலில் சதங்கை, தலையில் கருப்பு துண்டு கட்டி, கையில் உலக்கை ஏந்தியும் காட்சியளிப்பர்.

வீட்டினுள் காட்டேரி வேடம் தரித்தவருக்கு படையல்கள் வைத்து சுடுகாட்டில் இருந்து எடுத்து வந்த மண் உணவாக கொடுக்கப்படும். அதனை சாப்பிட சாப்பிட காட்டேரியின் அருளும் கோபமும் உக்கிரமடையும்.



## ஓர் இனம் அழிக்கப்பட வேண்டும் என்றால் அந்த இனத்தை போர் ஆயுதங்கள் கொண்டு தாக்கவேண்டிய, அழிக்க வேண்டிய அவசியமில்லை. அவர்களின் கலை கலாச்சார பண்பாட்டு அம்சங்களை சீர்குலைத்தால் போதும் அந்த இனம் தானாக அழிந்து விடும்.

இதனை தொடர்ந்தே தனது விளையாட்டையும் ஆட்டத்தையும் ஆரம்பிப்பாள் காட்டேரித்தாய். காலை 11 மணியளவில் ரோதமுனி ஆலயத்தில் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் காட்டேரியம்மனோடு சேர்ந்து எதிரில் உள்ள உலக்கை ஏந்திய குழுவினரும் இசைக்கு ஏற்றாற் போல் ஆடுவர். இங்கு பிரதான இசைக்கருவியாக தப்பு பயன்படுத்தப்படுகின்றது. காட்டேரியம்மனானது உலக்கை ஏந்தி ஆடுபவர்களை துஸ்டர்களாக எண்ணி, அவர்களை விரட்டியடிப்பது தீமையை விலக்கி நன்மை பெருக்குவதாக அமைந்துள்ளது. மேலும் காட்டேரியம்மன் ஒரு உயரமான மலையில் வாழ்வதாகவும் அதனை இடிக்க துஸ்டர்கள் உலக்கையை காட்டுவதாகவும் அவர்களை விரட்டியடிக்கவே காட்டேரியம்மன் அவதரித்ததாகவும் ஊர் மக்கள் நம்புகின்றனர்.

மேலும் காட்டேரியம்மன் தப்பிசைக்கு ஏற்றவாறு சுளகை விசுக்கி விசுக்கி ஆடி வருவார். எதிரணியில் உலக்கை வைத்துள்ள ஒருவர் “பச்சொலக்க” எனக்கூற அணியில் உள்ள ஏனையோர் “பாரமில்லை” என கோசமிடுவர். “பச்சொலக்க பாரமில்லை” என்ற கோசம் கேட்டவுடன் அம்மனுக்கு கோபம் உச்சமடையும். காட்டேரியம்மனை கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்வதற்காக இடுப்பில் துணி ஒன்றைக் கட்டி பின்னால் இருந்து இழுத்து இழுத்து விடுவர். மேலும் சுற்றியுள்ள பக்தர்கள் ஒஓ.....ஹாஹாஹா என கோசமிடுவர். சுமார் 3 மணித்தியால ஆட்டத்தின் பின்பு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு வருகை தந்து



இறுதியாக கோவிலை வலம் வந்து பக்தர்களுக்கு ஆசி வழங்குவதுடன் இந்நிகழ்வு நிறைவு பெறுகிறது.

ஆரம்ப காலத்தில் வருகைதந்த கருப்பண்ணன் கவுண்டர் முதல் மாயழகு புஷ்பராஜ் தலைமுறை வரை சுமார் 6 தலைமுறைகள் தொடர்ச்சியாக இன்று வரை இந்த நாடக பண்புடைய சடங்கை செய்து வருகின்றனர். ஊர் நன்மைக்காகவும், ஊரின் காவலுக்காகவும் மக்கள் நலம் வேண்டியும் இந்நிகழ்வு நடைபெறுவதாக சென்றகுலர்ஸ் தோட்டத்தை சேர்ந்த கலைஞர்களாகிய சுப்பிரமணியம் ராசு, நல்லு பெரியசாமி என்போர் தெரிவித்தனர்.

மேலும் காட்டேரியம்மனை கருப்பண்ணன் கவுண்டர் குடும்பத்தினர் குலதெய்வமாக வழிபட்டுள்ளனர். இந்நிகழ்வின் அரங்க வெளியாக தெரு வீதி பயன்படுத்தப்படுகின்றது. மேலும் பலர் நேர்த்தி இட்டு காட்டேரியம்மனை வழிபடுவர். இவ்வளவு காலமும் முறையாக பேணப்பட்டு நேர்த்தியாக செய்யப்பட்ட இந்தச் சடங்கு முறை எதிர்காலத்திலும் எந்தவித தொய்வும் இன்றி சீரும் சிறப்புமாக செயற்பட வேண்டும்.

ஓர் இனம் அழிக்கப்பட வேண்டும் என்றால் அந்த இனத்தை போர் ஆயுதங்கள் கொண்டு தாக்கவேண்டிய, அழிக்க வேண்டிய அவசியமில்லை. அவர்களின் கலை கலாச்சார பண்பாட்டு அம்சங்களை சீர்குலைத்தால் போதும் அந்த இனம் தானாக அழிந்து விடும். இவ்வாறு ஒருகாலமும் நடந்துவிடக்கூடாது. எனவேதான், எமக்கு எமது கலை கலாச்சார பண்பாட்டு அம்சங்களை பேணிப் பாதுகாக்க வேண்டிய தலையாய கடமை உள்ளது.

**கலைகளை காக்க நல்லதோர் கலைஞனாய் முன்வருவோம்.**

# இஞ்சித் துண்டாய் மிதக்கும் அதிகாரம்



இன்றின் முகத்தில்
அதிகாரத்தின் பொய்மை
ராஜாவைப் போல் அமர்ந்திருக்கிறது.

காலவீணையின் பாடல்
எளியோரின் குரல் இன்றி
அரங்கெல்லாம் ஒலிக்கிறது.

வாழ்வை  பெரு வியப்போடு பார்க்கும்
என் பிள்ளையின் விழிகளும்
அதிகாரத்தின் ஓவியங்களை
அலங்கரிக்க பிடுங்கப்படுகிறது.

தேயிலைக்காடெங்கும் விரிந்து பரந்து
குளிர்ந்த காற்றில் தலை சாய்த்திருக்கும்
எமது மகத்துவமான பசுமையான சொற்கள்

ஜனநாயகத்தின் பெயரால்...
அதிகாரத்தின் ஆயுதங்களால்
அறுவடை செய்யப்படுகின்றன.

அதிகாரத்தின் கருஞ்சுவர்கள்
மேலும் மேலும் முட்களை வளர்த்து
என் சாதாரண தேநீர் கோப்பைகளை
உடைந்து நொறுக்குகிறது.

யார் கண்டார்...?
நாளைய தினத்தில் அதிகாரத்தின்
சுழற்சி மாறலாம்.

நான் அதிகாரத்தை
ஓர் இஞ்சித் துண்டைப் போல
நசுக்கி
என் எளிய தேநீர் கோப்பையில்
மிதக்க விட்டு

வலிமையான பசுமையான சொற்களில்
காலவீணையில் ஜனநாயகத்தின்
மகத்தான எளியவரின் பாடலை பாடலாம்.

சண்முகம் சிவகுமார்